thinaboomi.com

திருச்சி, சனி, மார்ச் 15, 2025 | ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி | பக்கம் 8 | ₹ 3.00



**ஊழியர்கள் பணி நீக்க விவகாரம்: நீதிமன்ற உத்தரவால் அதிபர் டிரம்பிற்கு திடீர் பின்னடைவு**

...2-ம் பக்கம்

**ஹோலி பண்டிகை கொண்டாட்டம்: ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திரமோடி வாழ்த்து**

...3-ம் பக்கம்

**ஐ.பி.எல். டெல்லி அணியின் புதிய கேப்டனாக ஆல்ரவுண்டர் அக்சர் படேல் நியமனம்**



...6-ம் பக்கம்

ராமேஸ்வரத்தில் புதிய விமான நிலையம் | ஓசூர், விருதுநகரில் புதிய டைடல் பூங்கா | மதுரை, கடலூரில் காலணி தொழிற்பூங்கா | 9 இடங்களில் புதிய சிட்கோ தொழிற்பேட்டைகள் | அரசு ஊழியர்களுக்கு பணப்பலன் பெறும் சலுகை

# கல்லூரி மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி

## தமிழ்நாடு பட்ஜெட்டில் புதிய அறிவிப்புகள்



● சென்னையில் நேற்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் தமிழ்நாடு அரசின் 2025-2026-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார். சட்டமன்ற பேரவை நிகழ்ச்சியில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை மார்ச் 15-

**ராமேசுவரத்தில் புதிய விமான நிலையம், ஓசூர், விருதுநகரில் புதிய டைடல் பூங்கா, மதுரை, கடலூரில் காலணி தொழிற் பூங்கா, 9 இடங்களில் புதிய சிட்கோ தொழிற் பேட்டைகள், அரசு ஊழி யர்களுக்கு பணப்பலன் பெறும் சலுகை, அடுத்த 2 ஆண்டுகளில் 20 லட் சம் கல்லூரி மாணவர்க ளுக்கு இலவச மடிக்க ணினி உள்ளிட்ட பல் வேறு புதிய அறிவிப்புகள் தமிழக பட்ஜெட்டில் அறி விக்கப்பட்டுள்ளது.**


### முழு நிதிநிலை அறிக்கை

தமிழக அரசின் அடுத்த நிதியாண்டுக்கான (2025-26) நிதிநிலை அறிக்கை, சட்டப் பேரவையில் நேற்று (மார்ச் 14) நிதியமைச்சர் தங்கம் தென்னரசு நிதிநிலை அறிக் கையை தாக்கல் செய்தார். அடுத்த ஆண்டு சட்டப்பேர வைத் தேர்தலை தமிழ்நாடு எதிர்கொள்ளவுள்ள நிலை யில், அதற்கு முன்பாக தி.மு.க. தலைமையிலான அரசு தாக்கல் செய்யும் 5-வது மற்றும் கடைசி முழுமை யான நிதிநிலை அறிக்கை இதுவாகும். எனவே, பொது மக்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் என பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகள், எதிர்பார்ப்புகளை நிறை வேற்ற வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டிருக்கும் நிலையில், நிதியமைச்சர் தங் கம் தென்னரசு 2-வது ஆண் டாக நிதிநிலை 2025-26 ஆம் நிதியாண்டுக்கான அறிக்கை யைத் தாக்கல் செய்தார். இதற்கு முன்னதாக பேரறி ஞர் அண்ணா, கலைஞர் நினைவிடத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு மரியாதை செலுத்தினார்.

### சென்னைக்கு அருகே

சென்னைக்கு அருகே 2,000 ஏக்கர் பரப்பளவில் ஒருங்கிணைந்த புதிய நகரம் உருவாக்கப்படும் என்ற அறி விப்பு முதன்மையானதாகப் பார்க்கப்படுகிறது. இந்த புதிய நகரம், மெட்ரோ வசதி, பேருந்துகள், சாலை வசதிகள் உள்ளிட்டவற்றுடன் உருவாக் கப்படும் என்றும், நகர்ப்புற சதுக்கங்கள், பூங்காக்கள் போன்ற கட்டமைப்பு வசதி கள் புதிய நகரில் அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

### 1 ரூபாய் எவ்வாறு செலவிடப்படுகிறது?




### பணப்பலன் சலுகை...

கொரோனா காலத்தில் நிதி நெருக்கடியின் காரண மாக ஈட்டிய விடுப்பை சரண் செய்து பணம் பெறும் முறை நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. இந்த திட்டம் மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளது. அரசு ஊழியர்களின் கோரிக் கையை ஏற்று, ஈட்டிய விடுப்பை சரண் செய்து பணப்பலன் பெறும் சலுகை மீண்டும் செயலாக்கத்துக்கு கொண்டு வரப்படுகிறது. வரும் ஏப்ரல் 1 முதல் இந்த நடைமுறை அமலுக்கு வருகி றது. ஆண்டுக்கு 15 நாள்கள் வரை சரண் செய்து பணத் தைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிப்பு.

### வேளச்சேரியில் பாலம்

சென்னை விமான நிலை யம், கிளாம்பாக்கம் இடையே ரூ.9335 கோடியில் மெட்ரோ ரயில் விரிவாக்கப் பணிகள் நடைபெறும். கோயம்பேடு - பட்டாபிராம், பூந்தமல்லி - ஸ்ரீபெரும்புதூர் இடையே மெட்ரோ ரயில் சேவை உருவாக்கப்படும். சென்னை கிண்டியில் மெட் ரோ, பேருந்து, ரயில் போக்கு வரத்தை இணைக்க ரூ.50 கோடியில் பன்முக மையம். பூந்தமல்லி - போரூர் மெட்ரோ ரயில் தடம் வரும் டிசம்பரில் செயல்பாட்டுக்கு வரும். ரூ.88 கோடியில் சென்னை பெருநகரப் பகுதி களில் மழைநீர் உறிஞ்சும் 7 பல்லுயிர்ப் பூங்காக்கள். வேளச்சேரியில் புதிய பாலம் கட்டப்படும். ரூ.310 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் இந்த பாலத்தால் 7 இலட்சம் பேர் பயன் பெறுவார்கள்.

**ரூ தமிழ்நாடு 2025-26 நிதிநிலை அறிக்கை எல்லார்க்கும் எல்லாம்**

**தமிழக நிதிநிலை அறிக்கை 2025-26:**

**துறைகள் வாரியாக நிதி ஒதுக்கீடு விவரம்:**

| | | |
|---|---|---|
| 1) | பள்ளிக் கல்வித் துறைக்கு | ரூ.46,767 கோடி |
| 2) | உயர்கல்வித் துறைக்கு | ரூ.8,494 கோடி |
| 3) | இளைஞர்நலன் மேம்பாட்டுத்துறைக்கு | ரூ.572 கோடி |
| 4) | நகர்ப்புற வளர்ச்சிக்கு | ரூ.26,678 கோடி |
| 5) | ஊரக உள்ளாட்சிக்கு | ரூ.29,465 கோடி |
| 6) | நெடுஞ்சாலைத் துறைக்கு | ரூ.20,722 கோடி |
| 7) | மின்சாரத் துறைக்கு | ரூ.21,178 கோடி |
| 9) | மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு | ரூ.21,906 கோடி |
| 10) | போக்குவரத்துத் துறைக்கு | ரூ.12,964 கோடி |
| 11) | நீர்வளத் துறைக்கு | ரூ.9,460 கோடி |
| 12) | சமூகநலத் துறைக்கு | ரூ.8,597 கோடி |
| 13) | ஆதி திராவிடர் துறைக்கு | ரூ.3,924 கோடி |
| 14) | தொழில் துறைக்கு | ரூ.5,833 கோடி |

### மகளிர் உரிமைத் திட்டம்

கலைஞர் மகளிர் உரி மைத் திட்டத்துக்கு ரூ13,807 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப் படுகிறது. இதுவரை பலன் பெறாதோருக்கு உரிமைத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ரூ.6,668 கோடியில் 7 மாவட்டங்களில் புதிய கூட் டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதன் மூலம் 29.74 இலட்சம் மக்கள் பயன்பெறும். நகர்ப் பகுதிக ளில் அடிப்படைக் கட்ட மைப்பை மேம்படுத்த கலை ஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்துக்கு ரூ.2,000 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூ.3,500 கோடியில் ஊரகப் பகுதிக ளில் 1 லட்சம் புதிய வீடுகள் கட்டித்தரப்படும். சீரமைக்க இயலாத வீடுகளுக்குப் பதி லாகப் புதிய வீடுகள் என்ற வகையில் ரூ.600 கோடியில் 25,000 வீடுகள் கட்டித்தரப்ப டும். ஆண்டுதோறும் உலகத் தமிழ் ஒலிம்பியாட் போட்டி நடத்தப்படும். ரூ.1 கோடி பரி சுத்தொகை வழங்கப்படும்.

### கல்வித் துறையில்..

பெற்றோரை இழந்த 50 ஆயிரம் குழந்தைகளுக்கு மாதந்தோறும் ரூ.2,000 உத வித் தொகை வழங்கப்படும். ஐந்து ஆண்டுகளுக்குள் உலக தரவரிசையில் அண்ணா பல் கலைக்கழகத்தை முன்னி லைப்படுத்தவும், ஆசியா வின் தலைசிறந்த கல்வி நிறு வனமாக மாற்றவும் நடவ டிக்கை எடுக்கப்படும். அரசுப் பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி ரூ.700 கோடியாக உயர்த்தப்படும். அரசு கலை, அறிவியல் கல் லூரிகளில் மேலும் 15,000 இடங்கள் அமைக்கப்படும். வளர்ந்து வரும் துறைகளில் புதிய பட்டப்படிப்புகள் உரு வாக்கப்படும்.

### மாணவர்களுக்கு கணினி

20 லட்சம் கல்லூரி மாண வ-மாணவிகளுக்கு இலவச மடிக்கணினி வழங்கப்படும். கல்லூரி மாணவர்களுக்கு அவரவர் விரும்பும் வகை யில் கைக்கணினி அல்லது

(கடைசி பக்கம் பார்க்க)



### தமிழக பட்ஜெட் முக்கிய அம்சங்கள்:

1) 6,100 கி.மீ. நீளமுள்ள கிராம சாலைகள் ரூ.2,100 கோடியில் மேம்படுத்தப்படும்.
2) அரசு பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் தொகுப்பு நிதி ரூ.700 கோடியாக உயர்த்தப்படும்.
3) அரசுப் பொறியியல் கல்லூரிகளில் திறன்மிகு மையங்கள் ரூ.50 கோடி செலவில் உருவாக்கப்படும்.
4) 1 லட்சம் மகளிரைத் தொழில் முனைவோராக உயர்த்திடும் பெருந்திட்டம் செயல்படுத்தப்படும்.
5) பெண்கள் பாதுகாப்பை உறுதிசெய்ய ரூ.75 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.
6) ஓரகடம் செய்யாறு தொழில் வழித்தடம் ரூ.250 கோடியில் செயல்படுத்தப்படும்.
7) ரூ.150 கோடியில் புராதானக் கட்டிடங்கள் பழமை மாறாமல் புதுப்பிக்கப்படும்
8) ரூ.2,100 கோடியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய வீடுகள் சீரமைக்கப்படும்.
9) ரூ.50 கோடியில் விசைத்தறி நவீனப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும்.
10) பழங்குடியினர் வாழ்வாதாரக் கொள்கைக்கு ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.
11) பெற்றோர் இருவரையும் இழந்த 50,000 குழந்தைகளுக்கு மாதந்தோறும் ரூ.2,000 வழங்கப்படும்.
12) ரூ.125 கோடியில் ஆயிரம் ஆண்டு பழமையான கோயில்களுக்கு திருப்பணி மேற்கொள்ளப்படும்.
13) பழமையான தேவாலயங்களைப் புதுப்பிக்க ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.
14) 10 ஊராட்சிகளுக்கு தலா ரூ.1 கோடி ஊக்கத்தொகை வழங்கப்படும்.
15) அனைத்து மாநகராட்சிகளிலும் முதல்வர் படைப்பகம் அமைக்கப்படும்.
16) ரூ.50 கோடியில் வியன் திறன்மிகு மையம் அமைக்கப்படும்.
17) ரூ.70 கோடியில் 700 பேருந்துகள் இயற்கை எரிவாயுவில் இயக்கப்படும்.
18) 1,125 மின் பேருந்துகள் அறிமுகம் செய்யப்படும்.
19) விண்வெளித் தொழில்நுட்ப நிதி - ரூ.10 கோடி ஒதுக்கப்படும்.
20) ரூ.152 கோடியில் 10 புதிய அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படும்.
21) தமிழகத்தில் 25 இடங்களில் அன்புச்சோலை முதியோர் பராமரிப்பு மையம்.
22) 10 லட்சம் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வங்கிக் கடன் உதவிக்கு ரூ.2.5 லட்சம் கோடி.
23) கலைஞர் கைவினை திட்டத்தின் கீழ் 19,000 கைவினைஞர்களுக்கு மானிய நிதியாக ரூ.74 கோடி ஒதுக்கீடு.
24) ரூ.160 கோடியில் 2,000 பள்ளிகளில் கணினி ஆய்வகங்கள் தரம் உயர்த்தப்படும்.
25) ரூ.77 கோடியில் மேலும் 10 இடங்களில் தோழி விடுதிகள் உருவாக்கப்படும்.

## எதிர்கால வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கும் தமிழ்நாடு பட்ஜெட்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு

சென்னை, மார்ச் 15-

**‘எல்லோர்க்கும் எல் லாம்’ எனும் உயரிய நோக்கத்துடன் தமிழ்நாட் டின் மேம்பட்ட எதிர்கால வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளம் அமைத்திருக் கிறது தமிழ்நாடு பட்ஜெட் 2025 என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள் ளார்.**

சட்டப்பேரவையில் நேற்று (மார்ச் 14) தாக்கல் செய்யப்பட்ட தமிழக அர சின் 2025-2026 ஆம் ஆண்டுக் கான நிதிநிலை அறிக்கையின் சிறப்பம்சங்கள் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், “மகளிர் நலன் காக்கும் மாபெரும் திட்டங்கள், ததும்பி வழியும் தமிழ்ப் பெருமிதம், இளை ஞர்களுக்கு உலகை வெல் லும் உயர் தொழில்நுட்பம், தமிழ்நாடெங்கும் வேலை வாய்ப்புகளை அள்ளித்தரும் தொழிற்பூங்காக்கள், புதிய நக ரம், புதிய விமான நிலையம், புதிய நீர்த்தேக்கம், அதிவேக ரயில் சேவை என நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிடும் முன்முயற்சிகள். விளிம்பு நிலை மக்களை அரவணைக் கும் தாயுமானவரின் கரங்கள் என அனைவருக்குமான திட் டங்கள் பல அறிவிக்கப்பட் டுள்ளன.

‘எல்லோர்க்கும் எல்லாம்’ எனும் உயரிய நோக்கத்துடன் தமிழ்நாட்டின் மேம்பட்ட எதிர்கால வளர்ச்சிக்கு உறுதி யான அடித்தளம் அமைத்தி ருக்கிறது தமிழ்நாடு பட் ஜெட் 2025. அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் நிதித் துறை அதிகாரிகள் அனை வர்க்கும் வாழ்த்துகள்.” எனக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, 2025-26-ம் நிதி ஆண்டுக்கான தமிழக பொது பட்ஜெட்டை, சட்டப்பேர வையில் நிதி அமைச்சர் தங் கம் தென்னரசு நேற்று (மார்ச் 14) காலை தாக்கல் செய்தார். தமிழக பட்ஜெட் உரையில் 1 லட்சம் புதிய வீடுகள் முதல் மகளிர் உரிமைத் தொகை விரிவாக்கம் வரை பல்வேறு சிறப்பம்சங்கள் இடம்பெற் றுள்ளன.

## ஏப்ரல் 30-ம் தேதி வரை சட்டசபை கூட்டத்தொடர்

### சபாநாயகர் அப்பாவு அறிவிப்பு

சென்னை, மார்ச் 14-

**ஏப்ரல் 30-ம் தேதி வரை சட்டசபை கூட்டத் தொடர் நடைபெறும் என்று சபாநாயகர் அப் பாவு அறிவித்துள்ளார்.**

தமிழக சட்டசபையின் பட்ஜெட் கூட்டத் தொடர் நேற்று தொடங்கியது. சட்டச பையில் நேற்று கூடிய முதல் நாள் கூட்டத்தில் 2025-2026-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை (பட்ஜெட்) நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார். பட்ஜெட்டில் முக்கிய அறி விப்புகள் வெளியிடப்பட் டுள்ளன. பட்ஜெட் உரையை அமைச்சர் தங்கம் தென்னரசு காலை 9.32 மணிக்கு தொடங்கி மதியம் 12.10 மணிக்கு நிறைவு செய்தார். சுமார் 2 மணி நேரம் 38 நிமி டம் உரையை வாசித்தார்.

அதன் பின்னர் சபாநாய கர் அப்பாவு செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:- எல்லா தரப்பு மக்களும் ஏற் றுக்கொள்கின்ற வண்ணம் ஒரு நிதிநிலை அறிக்கையை அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்துள்ளார். இன்று வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ளது. அன் றைய தினத்தை தவிர அனைத்து நாட்களிலும் கேள்வி நேரம் நடைபெறும். வருகிற திங்கட்கிழமை முதல் 5 நாட்களுக்கு பட் ஜெட் மீதான பொதுவிவாத மும், பதிலுரையும் நடைபெ றும்.

அதன் தொடர்ச்சியாக 24-ம் தேதி முதல் அடுத்த மாதம் (ஏப்ரல்) 30-ம் தேதி வரை 24 நாட்கள் சட்டசபை கூட்டத் தொடர் நடைபெறும். அப் போது மானிய கோரிக்கை யின் மீது விவாதமும், வாக் கெடுப்பும் நடைபெறும். அதிக நேரம் பேச அனுமதிக் கவில்லை என குற்றம்சாட்டி, எதிர்க்கட்சியினர் நம்பிக்கை யில்லா தீர்மானம் கொண்டு வந்துள்ளனர்; இது ஒன்னும் புதுசு கிடையாது,

அ.தி.மு.க. தீர்மானத்திற்கு ஏற்கனவே பதில் அளித்துள் ளோம். அது சட்டசபையில் முடிவெடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## மார்க்கெட் விலை நிலவரம்




BSE -200.85 பாயின்ட் 73,828.91

NSE -73.30 பாயின்ட் 22,397.20



**தங்கம்**
1 சவரன் ₹66,400
1 கிராம் ₹8,300



**வெள்ளி**
1 கிலோ ₹112,000
1 கிராம் ₹112.00

**டாலர்** ₹86.95

**பெட்ரோல்** ₹100.75

**டீசல்** ₹92.34



### ஊழியர்கள் பணி நீக்க விவகாரம்:
# நீதிமன்ற உத்தரவால் அதிபர் டிரம்பிற்கு திடீர் பின்னடைவு

**வாஷிங்டன், மார்ச் 15-**

ஊழியர்கள் பணி நீக்கம் தொடர்பாக அதிபர் டிரம்ப் மற்றும் எலான் மஸ்க்கிற்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவில் டிரம்ப் அரசு பதவியேற்ற பிறகு பல்வேறு அதிரடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. டிரம்ப் நிர்வாகத்தில் அரசாங்க திறன் துறை தலைவர் எலான் மஸ்க், அரசின் பல்வேறு துறைகளில் உள்ள ஊழியர்களை பணி நீக்கம் செய்தார். செலவினை குறைப்பு நடவடிக்கையாக இத்தகைய முடிவுகளை டிரம்ப் நிர்வாகம் எடுத்தது.



ஆயிரக்கணக்கான ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்ட நிலையில், தொழிலாளர் அமைப்புகள் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தன. இந்த வழக்கை விசாரித்த அமெரிக்க பெடரல் கோர்ட்டு, பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களை மீண்டும் பணிக்கு எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. மேலும், பெரிய அளவிலான பணி நீக்கத்தை, மோசமான செயல் திறன் எனக் கூறி நியாயப்படுத்துவது சட்டப்பூர்வ தேவைகளை தவிர்ப்பதற்கான ஒரு போலி முயற்சி என்றும் நீதிபதி சாடியிருக்கிறார். அமெரிக்க கோர்ட்டின் இந்த உத்தரவு டிரம்ப் மற்றும் எலான் மஸ்க் மேற்கொண்ட நடவடிக்கைக்கு பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

# இத்தாலியில் நிலநடுக்கம்

**நேப்பிள்ஸ், மார்ச் 15-**

இத்தாலியில் நிலநடுக்கம் ஏற்பட்டதால் பீதியில் உறைந்த அந்த நாட்டு மக்கள்.

இத்தாலி நாட்டின் நேப்பிள்ஸ் நகரத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை 1.25 மணியளவில் 4.4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. கடந்த 40 ஆண்டுகளில் இதுதான் அந்நகரத்தில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கம் என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து இத்தாலியின் தேசிய புவி இயற்பியல் மற்றும் எரிமலையியல் நிறுவனம் கூறுகையில், "நிலநடுக்கம் அபாயமுள்ள பகுதியான ப்ளெக்ரேயன் வயல்களின் பொஸ்ஸோலி பகுதியில் 3 கி.மீ. ஆழத்தில் இந்த நில அதிர்வானது பதிவு செய்யப்பட்டது" என்று தெரிவித்துள்ளது. நிலநடுக்கம் ஏற்பட்ட போது அம்மாகாணம் முழுவதும் பயங்கர சத்தத்துடன் அபாய ஒலிகள் தொடர்ந்து ஒலித்ததாகவும், சில இடங்களில் பயங்கர அதிர்வுகள் உணரப்பட்டதாகவும் அப்பகுதிவாசிகள் தெரிவித்தனர். இதுகுறித்து வெளியான புகைப்படங்களில் அப்பகுதியிலுள்ள சில கட்டிடங்கள் இடிந்து கீழே நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களின் மீது விழுந்து சிதைந்திருப்பது பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், பக்னோலி மாவட்டத்தில் கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கிய மக்களை மீட்புப் படையினர் பத்திரமாக மீட்டனர். இருப்பினும், இந்த நிலநடுக்கத்தின் பாதிப்புகள் குறித்த முழுமையான தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. நிலநடுக்கத்தின் அதிர்வுகள் தொடரும் என எதிர்பார்க்கப்படுவதால் பொஸ்ஸோலி, பாக்னோலி மற்றும் பக்கோலி மாவட்ட நிர்வாகத்தினர் அப்பகுதியிலுள்ள பள்ளிக்கூடங்களை மூட உத்தரவிட்டுள்ளனர். தற்போது நிலநடுக்கத்தைச் சந்தித்துள்ள நேப்பிள்ஸ் நகரமானது நில அதிர்வு அபாயமுள்ள ப்ளெக்ரேயன் வயல்கள் எனும் மிகப் பெரிய அளவிலான எரிமலையின் பெருவாயின் மீது அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு செயற்கைக்கோள்களை ஏவி ரூ.1,243 கோடி வருவாய் ஈட்டிய இந்தியா

**புதுடெல்லி, மார்ச் 15-**

வெளிநாட்டு செயற்கைக் கோள்களை ஏவியதன் மூலம் ரூ. 1,243 கோடி வருவாயை இந்தியா ஈட்டியுள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளில், வெளிநாட்டு செயற்கைக்கோள்களை ஏவியதன் மூலம் இந்தியா 1,243 கோடி ரூபாய் மதிப்பிலான வருவாயை ஈட்டியுள்ளதாக விண்வெளித் துறையை கவனிக்கும் மத்திய இணை மந்திரி ஜிதேந்திர சிங் மக்களவையில் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் அளித்துள்ள எழுத்துப்பூர்வ பதிலில் தெரிவித்திருப்பதாவது:-ஜனவரி 2015 முதல் டிசம்பர் 2024 வரையிலான கடந்த பத்து ஆண்டுகளில், இஸ்ரோவின் PSLV, LVM3 மற்றும் SSLV ஏவுகணை வாகனங்கள் மூலம் மொத்தம் 393 வெளிநாட்டு செயற்கைக் கோள்கள் மற்றும் மூன்று இந்திய செயற்கைக்கோள்கள் வணிக அடிப்படையில் ஏவப்பட்டுள்ளன. வளர்ந்த நாடுகள் உட்பட 34 நாடுகளின் செயற்கைக்கோள்களை இந்தியா ஏவியுள்ளது. இதன் மூலம் இந்தியா 1,243 கோடி ரூபாய் மதிப்பிலான அந்நியச் செலாவணி வருவாயை ஈட்டியுள்ளது.

அமெரிக்கா - 232, இங்கிலாந்து - 83, சிங்கப்பூர் - 19, கனடா - 8 உள்ளிட்ட 393 வெளிநாட்டு செயற்கைக் கோள்களை இந்தியா ஏவியுள்ளது. தொடர்ச்சியான வெற்றிகரமான பணிகள் மூலம், இந்தியா தற்போது ஒரு பெரிய விண்வெளி சக்தியாக உள்ளது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார். இந்தியா தற்போது விண்வெளி வீரர்களை விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்துக்கு தயாராகி வருகிறது. தொடர்ந்து 2035-ம் ஆண்டுக்குள் விண்வெளியில் 'பாரதிய அந்தரிக்ஷா நிலையத்தை' அமைப்பதையும், 2040-க்குள் முதல் இந்தியரை சந்திரனுக்கு அனுப்புவதையும் நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

# ஆயிரம் ஆண்டு பழமையான கோவில்களின் திருப்பணிக்கு ரூ.125 கோடி நிதி ஒதுக்கீடு

**சென்னை, மார்ச் 15-**

ஆயிரம் ஆண்டு பழமையான கோவில்களின் திருப்பணிக்கு ரூ.125 கோடி நிதி ஒதுக்கீடு என்று நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்.

2025-2026-ம் ஆண்டுக்கான தமிழக பட்ஜெட் உரையின் போது நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேசியதாவது:-

கடந்த நான்கு ஆண்டுகளில் 2.662 திருக்கோவில்களில் திருப்பணிகள் நிறைவு பெற்று குடமுழுக்குகள் நடைபெற்றுள்ளன. தமிழ்நாட்டில் உள்ள 777 திருக்கோவில்களில் நடைபெறும் அன்னதானம் வழங்கும் திட்டத்தின் கீழ் தினந்தோறும் சராசரியாக ஒரு லட்சம் பேர் பயனடைந்து வருகின்றனர்.

திருக்கோவில் பாதுகாப்பதற்கு சொத்துகளையும் உடைமைகளையும் இந்த அரசு எடுத்த பெருமுயற்சிகளின் பயனாக, 7,327 ஏக்கர் நிலங்களும். 36.38 இலட்சம் சதுர அடி மனைகளும், 5.98 இலட்சம் சதுர அடி கட்டடங்களும் திருக்கோவில் வசமாக்கப்பட்டுள்ளன. இவற்றின் மொத்த மதிப்பு 7.185 கோடி ரூபாய் ஆகும்.

84 திருக்கோவில்களில் திருக்குளங்களைச் சீரமைக்க 72 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்துசமய அறநிலையத் துறையின் பதிப்பகத் துறை மூலமாக 216 க்கும் மேற்பட்ட அரிய நூல்கள் மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டுள்ளன. 2025-26 ஆம் நிதியாண்டில், ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த திருக்கோவில்களில் திருப்பணிகள் செய்திட 125 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழகத்தின் கடன் வரம்புக்குள் உள்ளது: நிதித்துறை செயலாளர் உதயசந்திரன் பேட்டி

**சென்னை, மார்ச் 15-**

தமிழகத்தின் கடன் வரம்புக்குள் தான் உள்ளது என்று நிதித்துறை செயலாளர் உதயசந்திரன் தெரிவித்துள்ளார்.

2025-26-ம் நிதி ஆண்டுக்கான தமிழக பொது பட்ஜெட்டை சட்டசபையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று காலை சரியாக 9.30 மணியளவில் தாக்கல் செய்தார். பட்ஜெட்டில் பல்வேறு கவர்ச்சிகரமான அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது.இதனிடையே தமிழ்நாடு கடனில் தத்தளிக்கிறது. ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கு நிதியில்லை. நிர்வாகத் திறமையற்ற அரசு நடக்கிறது என்பதே எதார்த்த உண்மை என்று எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார். இந்தநிலையில், நிதித்துறை செயலாளர் உதயசந்திரன் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:- தமிழ்நாடு அரசின் வருவாய் பற்றாக்குறை ரூ.41,000 கோடியாக குறையும். மாநில அரசின் கடன் வாங்கும் வரம்புக்குள்தான் உள்ளது. மத்திய அரசிடம் இருந்து பல திட்டங்களுக்கான நிதி வந்திருந்தால் இது மேலும் குறைந்திருக்கும். ஜி.எஸ்.டி.யை பொறுத்தவரை டிஜிட்டல் சேவையில் கூடுதல் கவனம் செலுத்திவருகிறோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# காலை உணவுத் திட்டத்திற்கு 600 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு
### பட்ஜெட்டில் அறிவிப்பு

**சென்னை, மார்ச் 15-**

முதல்வரின் காலை உணவுத் திட்டத்திற்கு ரூ. 600 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்.

தமிழக பட்ஜெட் உரையின் போது நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேசியதாவது:- தமிழ்ச் சமூகத்தை வழிநடத்திய தலைவர்கள் பலரும் காலந்தோறும் வறுமையை அகற்றிடவும், மாணவர்களின் கல்வி நலன்களைப் பாதுகாத்திடவும் பல முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தி வந்துள்ளனர். அதன் தொடர்ச்சியாக, "பள்ளிக் கல்வியை மேலும் பரவலாக்கவும், கற்றலை இனிமையாக்கவும் எல்லாக் குழந்தைகளும் பசியின்றிக் கல்வியை பெற்றிடவும் எந்தத் தியாகத்தையும் செய்திடுவோம்" என்று அறிவித்த முதல்வர் உன்னத நோக்கத்தினை உள்வாங்கி அறிமுகப்படுத்தப்பட்ட முதல்-அமைச்சரின் காலை உணவுத் திட்டம்' வாயிலாக, தமிழ்நாட்டிலுள்ள 30,992 அரசுப் பள்ளிகளிலும், ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள 3,995 அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 17.53 இலட்சம் மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்னர் மாணவர்களின் வருகை உயர்ந்துள்ளதோடு, அவர்களின் ஊட்டச்சத்தும் கற்றல் திறனும் மேம்பட்டுள்ளது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நாட்டிலேயே முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டம், தமிழ்நாட்டின் நகரப் பகுதிகளில் இயங்கிவரும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மேலும் 3.14 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில், வரும் கல்வி யாண்டு முதல் மேலும் விரிவுபடுத்தப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக வரும் நிதியாண்டில் 600 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# மனித நேய மக்கள் கட்சி எம்.எல்.ஏ. ஜவாஹிருல்லாவுக்கு ஓராண்டு சிறை
### தண்டனையை உறுதி செய்த ஐகோர்ட்

**சென்னை, மார்ச் 15-**

மனித நேய மக்கள் கட்சி எம்.எல்.ஏ. ஜவாஹிருல்லாவுக்கு ஓராண்டு சிறை தண்டனையை சென்னை ஐகோர்ட் உறுதி செய்துள்ளது. கடந்த 1997 டிசம்பர் 15 முதல் ஜூன் 20, 2000 ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் வெளிநாடுகளில் இருந்து சட்டவிரோதமாக ரூ.1.5 கோடி பெற்றது தொடர்பான வழக்கில் மனித நேய மக்கள் கட்சி எம்.எல்.ஏ. ஜவாஹிருல்லா உள்ளிட்டோருக்கு ஓராண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. அந்த உத்தரவை எதிர்த்து ஜவாஹிருல்லா உள்ளிட்டோர் சென்னை மாவட்ட 6-வது கூடுதல் அமர்வு கோர்ட்டில் மேல்முறையீடு செய்தனர். இந்த மனுவை 6-வது கூடுதல் அமர்வு கோர்ட்டு நீதிபதி கே.தனசேகரன் நேற்று முன்தினம் விசாரித்து, ஜவாஹிருல்லா உள்ளிட்ட 5 பேருக்கும் விதிக்கப்பட்ட தண்டனை மற்றும் அபராதத்தை உறுதிசெய்து உத்தரவிட்டார். இந்த உத்தரவை எதிர்த்து அவர்கள் சென்னை ஐகோர்ட்டில் மேல்முறையீடு செய்தனர்.

இந்நிலையில், மனித நேய மக்கள் கட்சி எம்.எல்.ஏ. ஜவாஹிருல்லா உள்ளிட்டோருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை சென்னை ஐகோர்ட்டு உறுதி செய்துள்ளது. இதன்படி ஜவாஹிருல்லா மற்றும் அவருக்கு உடந்தையாக இருந்த ஹைதர்அலி, சையது நிசார் அகமது, ஜி.எம்.சேக் மற்றும் நல்ல முகமது களஞ்சியம் ஆகியோரின் தண்டனையை உறுதி செய்து சென்னை ஐகோர்ட்டு நீதிபதி வேல்முருகன் உத்தரவிட்டார். மேலும் ரம்ஜான் நோன்பு காலம் என்பதால் உத்தரவை நிறுத்தி வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, தீர்ப்பை ஒரு மாதத்துக்கு நிறுத்தி வைப்பதாக நீதிபதி தனது உத்தரவில் தெரிவித்துள்ளார்.

**15-03-2025**




**மேஷம்:-** நல் ஆரோக்கியம் ஏற்படும். சந்ததி விருத்தி உண்டாகும். அரசுப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். வாக்கு வன்மையால் வருமானம் பெருகும்.

**ரிஷபம்:-** மனைவி, மக்களின் உடல் நிலையில் அக்கறை தேவை. மேலதிகாரிகள் மற்றும் பெரியவர்களிடம் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது. செலவுகள் கட்டுக்கடங்காமல் இருக்கும்.

**மிதுனம்:-** இன்றைய நாள் கழிவது யுகங்கழிவது போன்றிருக்கும். தாயின் உடல் நிலையில் அதிக அக்கறை கொள்ளுங்கள். நீர் நிலைகளில் எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம்.4

**கடகம்:-** அரசு அதிகாரிகளின் ஆதரவு இருக்கும். கல்வியில் தேர்ச்சி உண்டு. தன்னம்பிக்கை மற்றும் தைரியம் அதிகரிக்கும். அதிகாரம் மிக்க பதவி உயர்வு ஏற்படலாம்.

**சிம்மம்:-** தனலாபம், குடும்ப சுகம் ஆகியவை குறையும். புதிய தொழில் முதலீடுகளை ஒத்திப் போடுவது நல்லது. வார்த்தைகளை அளந்து பேசுவது வம்புகளை தவிர்க்க உதவும்.

**கன்னி:-** இனிய பயணங்கள் ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். தெய்வீக காரிய ஈடுபாடு, தான தரும சிந்தனை ஏற்படும். தொழிலில் புதிய நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

**துலாம்:-** இட மாற்றங்களை எதிர்பார்க்கலாம். முறையற்ற வழிகளில் பணம் வரலாம். உறவுகளிடையே மனக்கசப்பு உருவாகலாம். கோபத்தைக் குறைத்தால் நன்மை ஏற்படும்.

**விருச்சிகம்:-** வேதனைகளை சாதனைகளாக மாற்றுங்கள். சிலருக்கு அந்தஸ்து குறைதல், பண விரயங்கள் ஏற்படலாம். கடின உழைப்பால் கல்வியில் தேர்ச்சி ஏற்படும்.

**தனுசு:-** பதவி உயர்வு, மனத் திருப்தி, தொழில், வியாபாரத்தில் பணவரவு என யோகங்கள் தரும் நாள். புத்தாடை அணிகலன்கள் புதிதாகச் சேரும். பெயரும், புகழும் உண்டாகும்.

**மகரம்:-** அரசியல்வாதிகள் ஆதரவால் நன்மைகள் நடக்கும். தன்னம்பிக்கை கூடும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். தெய்வ தரிசனம் பயணங்கள் திருப்தி தரும்.

**கும்பம்:-** வழக்கு விவகாரங்கள் தள்ளிப் போடுவது நல்லது. அதிகாரிகளிடம் பணிவுடன் நடந்து கொள்வது நல்லது. நினைப்பது ஒன்று, நடப்பது ஒன்றாக இருக்கும்.


**மீனம்:-** பல வழிகளிலும் பணவரவு ஏற்படும். எல்லா வகையிலும் ஏற்றம் கிடைக்கும். நண்பர்கள் சந்திப்பு, திருமணம் மற்றும் நல்முன்னேற்றம் ஆகியவை ஏற்படும்.

# தமிழக பட்ஜெட் 2025-2026: அரசியல் கட்சியினர் கருத்து

**சென்னை, மார்ச் 15-**

2025 - 26-ம் நிதியாண்டுக்கான தமிழக நிதிநிலை அறிக்கை நேற்று தாக்கல் செய்யப்பட்டதையடுத்து, பல்வேறு அரசியல் கட்சிகளும் இது குறித்து தங்களது கருத்துகளை வெளியிட்டுள்ளனர்.

**இ.கம்யூ பொதுச்செயலாளர் இரா.முத்தரசன்:-**



அரசின் துறைகளில் ஒப்பந்தப் பணியாளர்களாக பணிபுரிந்து வரும் தொழிலாளர்கள் பணி பாதுகாப்பு உறுதி செய்யப்படவில்லை. சொறப்பத் தொகை தொகுப்பூதியத்தில் பணியாற்றும் ஒப்பந்தப் பணியாளர்கள் கவனிக்கத் தவறியது வருத்தம். நூறுநாள் வேலைத் திட்டத்திற்கு தொழிலாளர் ஊதியப் பாக்கி உட்பட ரூ.3 ஆயிரத்து 896 கோடி நிதி வழங்க மறுத்து வருவதை கடுமையான குரலில் கண்டித்திருக்க வேண்டும். சிறு, குறு, நடுத்தர தொழில் துறையினர் மின் கட்டணத்தில் சலுகை கோரி வருவதையும், நிலைக்கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தி வருவதையும் நிதி நிலை அறிக்கை கருத்தில் கொண்டிருக்க வேண்டும். 2025- 26-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை சமூகத்தின் பல தரப்பு மக்களின் உணர்வுகளை பிரதிபலித்துள்ள போதிலும், தொழிலாளர்கள், அடித்தட்டு உழைக்கும் மக்களின் எதிர்பார்ப்பு என்று தெரிவித்துள்ளார்.

**பா.ம.க. நிறுவனர் ராமதாஸ்:**



நிதிநிலை அறிக்கை குறித்து அவர் கூறியிருப்பதாவது, எல்லோருக்கும் எல்லாம் என்ற முழக்கத்துடன் தொடங்கப்பட்ட தமிழக அரசின் நிதிநிலை அறிக்கைக் குறித்த பிரசாரம், நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பிறகு யாருக்கும் எதுவும் இல்லை என்ற எதார்த்தத்துடன் நிறைவடைந்திருக்கிறது. கல்வி, மருத்துவம், வேளாண்மை போன்ற முதன்மைத் துறைகளுக்கு போதிய அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. மாணவர்களுக்கு இலவச கணினி போன்ற சில கவர்ச்சியான அறிவிப்புகள் வெளியிடப்பட்டாலும் கூட, அவை மக்களை ஏமாற்றும் அறிவிப்புகளாக உள்ளன என்று தெரிவித்துள்ளார்.மேலும், நடப்பாண்டில் வருவாய்ப் பற்றாக்குறை இருக்காது என்றும், ரூ.1000 கோடிக்கும் மேல் வருவாய் உபரி கிடைக்கும் என்றும் தமிழக அரசு கூறி வந்த நிலையில், ரூ.41,634.93 கோடி வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

**மத்திய இணையமைச்சர் எல்.முருகன்:**



அடுத்த ஆண்டு சட்டசபை பொதுத் தேர்தல் நடக்க உள்ளதால், 2026ல் முழு அளவிலான பட்ஜெட் தாக்கல் செய்ய முடியாது. இடைக்கால பட்ஜெட் தான் தாக்கல் செய்ய முடியும். வெற்று விளம்பர திமுக அரசு தாக்கல் செய்யும் கடைசி முழு பட்ஜெட் இது தான். தொழிற்பூங்காக்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள், தொழிற்பேட்டைகள் என பட்ஜெட்டில் அறிவிப்பு மட்டும்தான் உள்ளது. ஆண்டுதோறும் பட்ஜெட்டில் அறிவித்தால் போதுமா? திட்டங்களை செயல்படுத்துவது எப்போது? என்று கேள்வி எழுப்பியிருக்கிறார்.

# பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு மாதம் ரூ.2 ஆயிரம் உதவித்தொகை

**சென்னை, மார்ச் 15-**

பெற்றோரை இழந்து வாடும் குழந்தைகளுக்கு மாதம் ரூ.2 ஆயிரம் உதவித் தொகை வழங்கப்படும் என அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

2025-2026-ம் ஆண்டுக்கான தமிழக பட்ஜெட் உரையின் போது நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேசியதாவது:-

இயற்கையினையும் உள்ளடக்கிய உலக உடன்பிறப்பு நேயத்தை உள்வாங்கி உருவாக்கப்பட்டதுதான் முதல்-அமைச்சரின் தாயுமானவர் திட்டம். இத்திட்டத்தின் கீழ், தற்போது மிகவும் வறிய நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் கடைக்கோடி ஏழைக் குடும்பங்களையும் கண்டறிந்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற அரசு முடிவு செய்துள்ளது.

ஆதரவற்றோர். தனித்து வாழும் முதியோர். ஒற்றைப் பெற்றோர் குடும்பங்கள். பெற்றோரை இழந்த குழந்தைகள், மனநலம் குன்றியவர்கள். மாற்றுத்திறனாளிகள், சிறப்புக் குறைபாடு உடைய குழந்தைகள் உள்ள குடும்பங்கள் போன்ற சமூகத்தின் விளிம்புநிலையில் வாழும் மக்கள் அனைவரும் இத்திட்டத்தின்கீழ் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மட்டுமன்றி அரசு நலத்திட்டங்களில் முன்னுரிமை வழங்கப்படும்.

முதற்கட்டமாக. மிகவும் வறிய நிலையில் உள்ள சுமார் 50,000 குடும்பங்களில் குழந்தைகள் தங்களின் இரண்டு பெற்றோரையும் இழந்து தங்களது உறவினர்களின் பாதுகாப்பில் வளர்ந்து வருவது தெரியவந்துள்ளது. தாயுமானவரின் கரங்கள் இக்குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில் இக்குழந்தைகளின் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு வரை இடைநிற்றல் இன்றி அவர்கள் கல்வியை தொடர. மாதம் 2,000 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும். பள்ளிப்படிப்பு முடித்தவுடன் கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# திருவான்மியூர் - உத்தண்டி இடையே 4 வழி உயர்மட்ட சாலை அமைகிறது

**சென்னை, மார்ச் 15-**

போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் விதமாக, திருவான்மியூர் - உத்தண்டி இடையே 4 வழி உயர்மட்ட சாலை அமைக்கப்படும் என்று அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்;

2025-2026-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்து பேசியதாவது:-

முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில் 16,500 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 2,130 கி.மீ. முக்கியச் சாலைகள் நான்கு வழி மற்றும் இருவழிச் அகலப்படுத்தப்பட்டுள்ளன. 5,000 கி.மீ.க்கும் அதிகமான ஊராட்சி ஒன்றியச் சாலைகள் பிற மாவட்ட சாலைகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாண்டு சென்னையில் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலைக் கையாளும் விதமாக, சென்னை நகரின் கிழக்குக் கடற்கரைச் சாலையில் திருவான்மியூரிலிருந்து உத்தண்டி பகுதி வரை 14.2 கி.மீ. நீளத்திற்கு நான்கு வழித்தட உயர்மட்டச் சாலை 2,100 கோடி ரூபாய் மதிப்பில் தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் மூலம் அமைக்கப்படும்.

தொழில் வளர்ச்சியை மேம்படுத்தவும், அதிக வேலைவாய்ப்பை உருவாக்கவும் ஒரகடம்-செய்யார் தொழில் வழித்தடம் உருவாக்கப்படும். இதற்காக, 250 கோடி ரூபாய் மதிப்பில் முதற்கட்டப் பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

நகராட்சிகள், நகரங்கள் மற்றும் மாநகரங்களில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் விதமாக, முக்கிய நகரங்களுக்கு புறவழிச் சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக, 348 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12.5 கி.மீ. நீளம் கொண்ட கோயம்புத்தூர் மேற்கு புறவழிச்சாலை. மற்றும் 225 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12.4 கி.மீ நீளம் கொண்ட திருநெல்வேலி மேற்கு புறவழிச்சாலை உள்ளிட்ட 14 புறவழிச்சாலைகள் அமைக்கும் பணிகள் மொத்தம் 1,713 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டு தொடங்கும். மேலும், 48 கி.மீ. நீள மதுரை வெளிவட்டச் சாலை அமைத்திட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# தமிழக பட்ஜெட் 2025 - 2026

## சென்னை, கோவை, மதுரையில் மெட்ரோ ரெயில் சேவைகள்

### அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம்

**சென்னை, மார்ச் 15-**

சென்னை, கோவை, மதுரையில் மெட்ரோ ரெயில் சேவைகள் குறித்து அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார். சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப்பணிகள் வேகமாக நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

2025-2026-ம் ஆண்டுக்கான தமிழக பட்ஜெட் உரையின் போது நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேசியதாவது:- தற்போது நாட்டின் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்று வரும் மெட்ரோ ரெயில் திட்டங்களிலேயே மிகப்பெரிய திட்டமாக 63246 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 119 கி.மீ. தூரத்திற்கு மூன்று வழித்தடங்களில் சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப்பணிகள் மிகவும் வேகமாக நடைபெற்று வருகின்றன. இவ்வழித்தடங்களில், பூந்தமல்லி முதல் போரூர் வரையிலான உயர் வழித்தடம் இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

கோவை மாநகரில் அவினாசி சாலை மற்றும் சத்தி மங்கலம் சாலை வழித்தடங்களில் 10.740 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், மதுரை மாநகரில் திருமங்கலம் மற்றும் ஒத்தக்கடை பகுதிகளை இணைக்கும் விதமாக 11,368 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மெட்ரோ ரெயில் திட்டத்திற்கென தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கைகள் மத்திய அரசின் மூலதனப் பங்களிப்பு பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன் இந்த இரு நகரங்களிலும் மெட்ரோ ரெயில் அமைக்கப்படுவதற்கான பணி தொடங்கப்படும்.

தாம்பரம் முதல் வேளச்சேரி வழியாக கிண்டி வரை 21 கி.மீ. தூரத்திற்கும். கலங்கரை விளக்கத்திலிருந்து ஐகோர்ட்டு வரை 6 கி.மீ. தூரத்திற்கும் மெட்ரோ ரெயில் வழித்தடம் நீட்டிப்பு செய்வதற்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்படும். தமிழ்நாட்டில் ஏற்பட்டு வரும் பரவலான பொருளாதார வளர்ச்சி மற்றும் விரிவான நகரமயமாக்கலைக் கருத்தில் கொண்டு, தலைநகர் புதுடெல்லி - மீரட் நகரங்களுக்கிடையே மித அதிவேக ரெயில் போக்குவரத்தை உருவாக்கி இயக்கப்படுவதைப் போன்று, மண்டல விரைவுப் போக்குவரத்தை தமிழ்நாட்டிலும் ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்படும். மணிக்கு 160 கி.மீ. வேகத்தில் அமைப்பினை பின்வரும் வழித்தடங்களில் உருவாக்கிட சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தால் விரிவான சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

மாமல்லபுரம். உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையிலும் அப்பகுதிகளில் நிலவும் நுண்ணிய சுற்றுச்சூழல் தன்மையை கருத்தில் கொண்டும் ரோப்வே உயர் போக்குவரத்து அமைப்பினை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வுகளை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் மேற்கொள்ளும். இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழகத்தில் 10 புதிய கலை கல்லூரிகள்

**சென்னை, மார்ச் 15-**

தமிழகத்தின் 10 இடங்களில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும்," என்று தமிழக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.

2025-26-ம் நிதி ஆண்டுக்கான தமிழக பொது பட்ஜெட்டை, சட்டப்பேரவையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று (மார்ச் 14) காலை தாக்கல் செய்தார்.

உயர் கல்வித்துறை சார்ந்த அறிவிப்புகளை வெளியிட்டு அவர் பேசுகையில், "தமிழகத்தில் இயங்கிவரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதல் மற்றும் இரண்டாம் சுழற்சி முறையில் மாணவர்கள் அதிகம் விரும்பித் தேர்ந்தெடுக்கும் பாடப்பிரிவுகளில் கூடுதலாக 15,000 இடங்கள் வரும் கல்வியாண்டு முதல் தொடங்கப்படும்.

பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தமிழகத்திலுள்ள அனைத்து அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் திறன்மிகு வகுப்பறைகள், நவீன ஆய்வகங்கள், மின் பதிப்புகள் கொண்ட நூலகங்கள், மாணவர் விடுதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் 2025-26 ஆம் ஆண்டில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் போன்ற முன்னோடித் திட்டங்களால் தமிழகத்தில் மாணவர்களின் உயர்கல்விச் சேர்க்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அத்தேவைகளை நிறைவேற்றும் விதமாக, நீலகிரி மாவட்டம் குன்னூர், திண்டுக்கல் மாவட்டம் நத்தம், சென்னை மாவட்டம் ஆலந்தூர், விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி, செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர், சிவகங்கை மாவட்டம் மானாமதுரை, திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை, தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர், பெரம்பலூர் மாவட்டம் பெரம்பலூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் ஆகிய இடங்களில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும்," என்று அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.

## ஹோலி பண்டிகை: ஜனாதிபதி, பிரதமர் வாழ்த்து

**புதுடெல்லி, மார்ச் 15-**

ஹோலி பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி மற்றும் பிரதமர் மோடி ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

வண்ணங்களின் திருவிழா என போற்றப்படும் ஹோலி பண்டிகை நேற்று கொண்டாடப்படுகிறது.

ஹோலி பண்டிகைக்கு முதல் நாளில் மகா விஷ்ணுவின் பக்தனான பிரகலாதனை கொல்லும் முயற்சியில் அசுர குலத்தை சேர்ந்த ஹோலிகா நெருப்பில் எரிந்து மாண்டுபோனதை குறிக்கும் வகையில் ஹோலிகா தகனம் நிகழ்ச்சி கொண்டாடப்படுகிறது.

ஹோலி பண்டிகை நேற்று நாடு முழுவதும் கொண்டாடப்படுவதை ஒட்டி, நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு மற்றும் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக ஜனாதிபதி திரவுபதி முர்மு தனது எக்ஸ் வலைதளத்தில், "வண்ணங்களின் பண்டிகையான ஹோலிப் பண்டிகையை முன்னிட்டு நாட்டு மக்கள் அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள். இந்த மகிழ்ச்சிப் பண்டிகை ஒற்றுமை, அன்பு மற்றும் நல்லிணக்கத்தின் செய்தியை அளிக்கிறது.

இந்த விழா இந்தியாவின் விலைமதிப்பற்ற கலாச்சார பாரம்பரியத்தையும் குறிக்கிறது. வாருங்கள், இந்த மங்களகரமான சந்தர்ப்பத்தில், பாரதத் தாயின் அனைத்து குழந்தைகளின் வாழ்க்கையிலும் தொடர்ச்சியான முன்னேற்றம், செழிப்பு மற்றும் மகிழ்ச்சியின் வண்ணங்களைக் கொண்டுவர நாம் அனைவரும் உறுதிமொழி எடுப்போம்" என்று அதில் பதிவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் மோடி தனது எக்ஸ் வலைதளத்தில், உங்கள் அனைவருக்கும் ஹோலி வாழ்த்துக்கள். மகிழ்ச்சியும், இன்பமும் நிறைந்த இந்தப் புனிதப் பண்டிகை, ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் புதிய உற்சாகத்தையும் சக்தியையும் ஊட்டுவதோடு, நாட்டு மக்களிடையே ஒற்றுமையின் நிறத்தை ஆழப்படுத்தட்டும் என்பது எங்கள் நம்பிக்கை" என்று அதில் பதிவிட்டுள்ளார்.

## அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களுடன் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை

**சென்னை, மார்ச் 15-**

தமிழக சட்டசபையின் பட்ஜெட் கூட்டத் தொடர் நேற்று தொடங்கியது. சட்டசபையில் நேற்று கூடும் முதல் நாள் கூட்டத்தில் காலை 9.30 மணிக்கு 2025-2026-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை நிதித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்கிறார்.

2025-26-ம் நிதியாண்டில் தமிழக அரசு உத்தேசமாக மேற்கொள்ள உள்ள செலவுகள், உத்தேசமான வருவாய் வரவுகள் போன்ற தகவல்களை அவர் அவைக்கு அளிப்பார்.

சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில் இந்த பட்ஜெட்டில் மக்களை கவருவதற்கான பல்வேறு திட்டங்கள் இடம் பெற அதிக வாய்ப்பு உள்ளதால், மக்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த நிலையில், சற்று நேரத்தில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ள நிலையில், அதிமுக எம்.எல்.ஏக்களுடன் கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை நடத்தி வருகிறார். சட்டசபை வளாகத்தில் உள்ள எதிர்க்கட்சி தலைவர் அறையில் ஆலோசனை நடந்து வருகிறது. சட்டசபையில் எழுப்ப வேண்டிய கேள்விகள் குறித்தும், அதிமுகவின் செயல்பாடுகள் குறித்தும் கட்சி எம்.எல்.ஏ.க்களுக்கு எடப்பாடி பழனிசாமி அறிவுரை வழங்கி வருகிறார்.

## தமிழகத்தின் கடன் ரூ.9 லட்சம் கோடியாக மேலும் அதிகரிப்பு

**சென்னை, மார்ச் 15-**

கடந்த ஆண்டு ரூ.8 லட்சம் கோடியாக இருந்த கடன் தற்போது மேலும் 1 லட்சம் கோடியாக அதிகரித்து உள்ளது.

தமிழக சட்டசபை பட்ஜெட் கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது. அமைச்சர் தங்கம் தென்னரசு 2025-26-ம் ஆண்டுக்கான பட்ஜெட்டை நேற்று தாக்கல் செய்தார். இந்தநிலையில் பட்ஜெட்டில் நேற்று வரவு- செலவு பற்றி புள்ளி விவரத்துடன் விரிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய கல்வி நிதி உள்ளிட்ட பல்வேறு நிதிகள் வராதது குறித்து சுட்டிக்காட்டப்பட்டது.

2025-26-ம் ஆண்டு திட்ட மதிப்பில் வருவாய் பற்றாக்குறை ரூ.41.634.93 கோடி என மதிப்பிடப்பட்டு உள்ளது. வரி வசூலை மேம்படுத்துதல், வரி விகிதங்களை சீரமைத்தல் உள்ளிட்ட வருவாய்களை பெருக்கும் நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு வருவாய் பற்றாக்குறை 2026-2027-ல் ரூ.31,282.23 கோடி ரூபாய் குறையும் என்றும், 2027-28-ம் ஆண்டு இந தொகை18,02,48 கோடி ரூபாயாக குறையும் என எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 2025-26-ம் ஆண்டில் மாநில அரசு 1 லட்சத்து 62 ஆயிரத்து 096.76 கோடிக்கு மொத்த கடன் பெற திட்டமிடப்பட்டு உள்ளது. மேலும் 55,844.53 கோடி ரூபாய் மதிப்பிலான பொதுகடனை அரசு திருப்பி செலுத்தும். இதன் விளைவாக 31.3.2026 அன்று நிலுவையில் உள்ள கடன் 9.29.959.30 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ரூ.8 லட்சம் கோடியாக இருந்த கடன் இப்போது மேலும் 1 லட்சம் கோடியாக அதிகரித்து உள்ளது.

## மக்களை மறந்த தமிழக அரசு பட்ஜெட்: த.வெ.க. தலைவர் விஜய் விமர்சனம்

**சென்னை, மார்ச் 14-**

தேர்தல் வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு, வெற்றுக் காகிதத்தால் பட்டம் விடும் பாசாங்கு வேலையே இந்த பட்ஜெட் அறிவிப்பு என்று த.வெ.க. தலைவர் விஜய் கூறியுள்ளார்.

தமிழக சட்டசபை பட்ஜெட் கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது. அமைச்சர் தங்கம் தென்னரசு 2025-26-ம் ஆண்டுக்கான பட்ஜெட்டை நேற்று தாக்கல் செய்தார். இந்தநிலையில், தமிழக பட்ஜெட் குறித்து த.வெ.க. தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில்,தமிழ்நாடு அரசின் 2025-26 ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் புதிதாக 9 இடங்களில் தொழிற்பேட்டை அமைக்கப்படும். பெற்றோர் இல்லாத குழந்தைகளுக்கு மாதந்தோறும் உதவித் தொகை, ஈட்டிய விடுப்பு சரண் 15 நாட்கள் வரை பணப்பலன். பத்து லட்சம் வரை மதிப்புள்ள சொத்தைப் பெண்கள் பெயரில் பதிவு செய்தால் பதிவுத் தொகையில் சலுகை என்பது போன்ற அறிவிப்புகளை வரவேற்கிறோம். அறிவிப்புகள் எல்லாம் நடைமுறைக்கு வருமா என்ற பலமான கேள்வி எழாமல் இல்லை. காரணம், இந்த விளம்பர மாடல் அரசின் கடந்த கால வெற்று விளம்பர அறிவிப்புகளே. புதிய அரசு கலை & அறிவியல் கல்லூரிகள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், கல்லூரிக் கல்வியின் தரத்தை நிலைநிறுத்த என்ன முன்னெடுப்புகளை எடுக்கப் போகின்றீர்கள்? அடிப்படையான சாலை வசதிகளைக் கவனிக்காமல் அன்புச் சோலை போன்ற போலி அக்கறை காட்டும் வெற்று அறிவிப்பு ஏன்? கல்லூரி மாணவர்களுக்கு மீண்டும் மடிக்கணினி வழங்கப்படுவது போல. பள்ளி மாணவர்களுக்கு எப்போது வழங்கப்படும் என்ற அறிவிப்பு இல்லையே ஏன்?

ஆசிரியப் பணி இடங்கள் நிரப்பப்படும் என்ற அறிவிப்பு, வெற்றிடங்களை நிஜமாகவே நிரப்பும் அறிவிப்பா? இல்லை. வழக்கம் போலான விளம்பர மாடல் அரசின் வெற்று அறிவிப்பா? என்பது போகப் போகத்தான் தெரியும். அண்ணா பல்கலையைத் தரவரிசையில் மேம்படுத்தும் அறிவிப்பெல்லாம் இருக்கட்டும். முதலில், அண்ணா பல்கலையில் பயிலும் மாணவிகளுக்கு முறையான பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்.

மக்கள் பாதிக்கப்படாத வண்ணம் புதிய விமான நிலையம் அமைக்கப்படும் என்ற தமிழ்நாட்டு அரசின் அறிவிப்பு குறித்து இந்த நிதி நிலை அறிக்கையில் விளக்கப்படவே இல்லை. மாறாக, மக்கள் நலன் சார்ந்த எந்த விளக்கமும் இல்லாமல் பரந்தூர் விமான நிலையம் அமைக்கும் பணிகள் விரைவுபடுத்தப்படும் என்ற அறிவிப்பு. பரந்தூர் பகுதி விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் செய்யப்படும் துரோகமாகவே இருக்கும்.

விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் இல்லை. தேர்தல் வாக்குறுதியான கேஸ் மானியம் ரூ.100 வழங்கப்படும் என்பது என்ன ஆனது என்று தெரியவில்லை. அதே போல, பெட்ரோல், டீசல் விலைக்குறைப்பு, வாக்குறுதியில் சொன்னது போல முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. மேலும், ரேஷனில் சர்க்கரை கூடுதலாக வழங்கப்படும் என்பது உள்ளிட்ட பல்வேறு தேர்தல் வாக்குறுதிகளும் என்ன ஆயின என்றே தெரியவில்லை.

இந்த நிதிநிலை அறிக்கையில் பெரும்பான்மையாக ஏதேதோ அறிவிப்புகள் என்று போலித்தனமே அதிகம் உள்ளது. ஆனால், சாதாரண நிலையில் இருக்கும் பொதுமக்கள் நேரடியாகப் பலன் அடையும் அறிவிப்புகள் ஏதும் அற்றதாகவே இருக்கிறது. விளம்பர மாடல் அரசின் மறைமுக முதலாளியாக இருக்கும் மத்திய பா.ஜ.க. அரசு பட்ஜெட்டில், டெல்லியில் இருந்து கொண்டு தமிழ்நாட்டையே மறந்து ஒதுக்கியது. இந்த விளம்பர மாடல் அரசோ தமிழ்நாட்டிலேயே இருந்து கொண்டு, தமிழ்நாட்டு மக்களின் நலன்களையே மறந்து விட்டு ஒரு பட்ஜெட்டை வெளியீட்டுள்ளது. இதுதான் இவர்கள் இருவரும் ஒரே மனநிலை கொண்ட உறவுக்காரர்கள் என்பதற்கான உறுதிப்பாடு ஆகும்.

மக்களைப் பற்றிக் கவலைப்படாமல், தேர்தல் வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு, வெற்றுக் காகிதத்தால் பட்டம் விடும் பாசாங்கு வேலையே இந்த பட்ஜெட் அறிவிப்பு, இந்த ஏமாற்று வேலைகளுக்கு எல்லாம் மக்கள் கொடுக்கும் மிகப் பெரிய பதிலடியாக 2026 சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் இருக்கும். இதை இந்த வெற்று விளம்பர மாடல் தி.மு.க. அரசு விரைவில் உணரும். மக்களை மறந்த திமுக அரசின் பட்ஜெட். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 40,000 காலி பணியிடங்கள் வரும் நிதி ஆண்டிலேயே நிரப்ப நடவடிக்கை

### அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு

**சென்னை, மார்ச் 15-**

40,000 பணியிடங்களை வரும் நிதி ஆண்டிலேயே நிரப்பும் பொருட்டு உரிய நடவடிக்கைகளை அரசு துரிதமாக மேற்கொண்டு வருவதாக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு கூறியுள்ளார்

2025-2026-ம் ஆண்டுக்கான தமிழக பட்ஜெட் உரையின் போது நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேசியதாவது:-

மாநிலத்தில் உள்ள தெரிவு முகமைகளான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம். ஆசிரியர் தேர்வு வாரியம். மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் ஆகியவற்றின் மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் வெவ்வேறு அரசுத் துறைகளிலுள்ள காலிப் பணியிடங்களுக்காக இதுவரை 57,016 அரசுப் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இது தவிர, பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக 21866 பேர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். ஆக மொத்தம் இந்த அரசு பொறுப்பேற்ற 4 ஆண்டுகளில் 78,882 நபர்களுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 40,000 பணியிடங்களை வரும் நிதி ஆண்டிலேயே நிரப்பும் பொருட்டு உரிய நடவடிக்கைகளை அரசு துரிதமாக மேற்கொண்டு வருகிறது.

அரசு அலுவலர்களுக்கு இந்தக் காப்பீடு உள்ளிட்ட சேவைகளை எதிர்வரும் 2025-26 ஆம் நிதியாண்டு முதல் வழங்கிட முன்வரும் வங்கிகளுடன் அரசு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்வதுடன், குறித்த காலத்திற்குள் இப்பயன்கள் அரசு அலுவலரின் குடும்பங்களுக்குக் கிடைத்திடுவதை தமிழ்நாடு அரசின் கருவூலத் துறை ஒருங்கிணைக்கும்.

150 வகையான அரசு சேவைகளை இணைய வழியில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.அரசு ஊழியர்களுக்கு வங்கிகளில் கடன் பெற சலுகைகள் வழங்கப்படும்.அரசு ஊழியர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஈட்டிய விடுப்பு நாள்களுக்கு பணப்பலன் பெறும் திட்டம் மீண்டும் கொண்டு வரப்படும்.அரசு ஊழியர்கள் ஈட்டிய விடுப்பு நாள்களை சரண் செய்து பணப்பலன் பெறலாம். அதன்படி 15 நாள்கள் வரை பணப் பலன் பெறும் திட்டம் மீண்டும் கொண்டுவரப்படுகிறது என்று அறிவித்தார்.

## மீன்பிடித் தடைக்காலத்தில் ரூ.8,000 மானியம்: அமைச்சர்

**சென்னை, மார்ச் 15-**

மீன்பிடித் தடைக் காலத்தில் மீனவர்களுக்கு ரூ.8,000 மானியம் வழங்கப்படும் என்று நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.;

2025-2026-ம் ஆண்டுக்கான தமிழக பட்ஜெட் உரையின் போது நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேசியதாவது:-

மீனவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவும் வகையில் கன்னியாகுமரி, நாகப்பட்டினம். தூத்துக்குடி திருநெல்வேலி. ராமநாதபுரம், கடலூர் திருவாரூர். புதுக்கோட்டை, மயிலாடுதுறை, தஞ்சாவூர். விழுப்புரம், திருவள்ளூர். செங்கல்பட்டு மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் மீன் இறங்கு தளம், மீன்பிடி வலை பின்னுதல் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் செயல்படுத்தப்படும். இலங்கை கடற்படையினரால் அதிகளவிலான தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படுவதை தடுக்கவும். இலங்கை சிறையிலுள்ள மீனவர்களை விடுவிக்கவும். தமிழ்நாடு முதல்வர் மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். மேலும், இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளின் உரிமையாளர்கள் நலன் கருதி. இலங்கையில் நெடுங்காலமாக மீட்க இயலாத நிலையில் உள்ள மீன்பிடி விசைப்படகுகளுக்கு நிவாரணத் தொகையை 8 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும். இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளுக்கான நிவாரணத் தொகையை 2 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், இலங்கை சிறையில் வாடும் மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட 350 ரூபாய் தின உதவித்தொகை 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் மீன் பிடிப்பு குறைவு மானியம் 1,79.147 மீனவர்களுக்குத் தலா 6,000 ரூபாய் வீதமும். மீன்பிடிப்புக் குறைவு காலத்திற்கென சேமித்து வைப்பதை ஊக்குவிக்க 2,10,850 மீனவர் மற்றும் 2,03.290 மீனவ மகளிருக்குத் தலா 3,000 ரூபாய் வீதமும், மீன்பிடி தடைக் காலத்தில். 198.923 மீனவர்களுக்கு மத்திய அரசின் பங்களிப்பு 1,500 ரூபாயுடன் மாநில அரசின் கூடுதல் பங்களிப்பாக 6,500 ரூபாயும் சேர்த்து தலா 8,000 ரூபாய் வீதமும் என. மொத்தம் 381 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மானியம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்கிட இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 286 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## தங்கம் விலை மீண்டும் புதிய உச்சம்

**சென்னை, மார்ச் 15-**

சென்னையில் நேற்று தங்கம் விலை பவுன் ரூ.65,800-ஐ கடந்து மற்றுமொரு புதிய உச்சத்தைத் தொட்டு விற்பனையானது.

அதன்படி, 22 கேரட் ஆபரணத் தங்கம் நேற்று (மார்ச் 14-ஆம் தேதி) கிராமுக்கு ரூ.110 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.8,230-க்கும், சவரனுக்கு ரூ.880 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.65,840-க்கும் விற்பனையானது. வெள்ளி விலை நேற்று கிராமுக்கு ரூ.2 உயர்ந்து, ஒரு கிராம் வெள்ளி ரூ.112-க்கும், ஒரு கிலோ வெள்ளி ரூ.1,12,000-க்கும் விற்பனையானது. சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப, இந்தியாவில் தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் வருகிறது. இந்த ஆண்டில் ஜனவரி 29-ம் தேதி முதல் தங்கம் விலை உயரத் தொடங்கியது. ஜனவரி 31-ம் தேதி ஒரு பவுன் ஆபரண தங்கம் ரூ.61,000-ஐயும், பிப்ரவரி 1-ம் தேதி ரூ.62,000-ஐயும் தாண்டியது. பிப்ரவரி 11-ம் தேதி ரூ.64,480 என்றும், 20-ம் தேதி ரூ.64,560 என்றும் அதிகரித்தது. இதன் பிறகு, ஒருசில நாட்கள் சற்று விலை குறைந்தாலும், பிப்ரவரி 25-ம் தேதி ஒரு பவுன் தங்கம் ரூ.64,600 ஆக உயர்ந்து, புதிய உச்சத்தை தொட்டது. இதன்பிறகு, ஏற்ற இறக்கமாக இருந்து வந்தது. சென்னையில் ஆபரண தங்கம் விலை நேற்று முன்தினம் புதிய உச்சத்தை பதிவு செய்தது. நேற்று முன்தினம் கிராமுக்கு ரூ.55 என பவுனுக்கு ரூ.440 உயர்ந்தது. இதனால், ஒரு கிராம் தங்கம் ரூ.8,120, ஒரு பவுன் ரூ.64,960 என உயர்ந்தது. இதன்மூலம் ஒரு பவுன் தங்கம் விலை ரூ.65,000-ஐ நெருங்கியது. இந்நிலையில், நேற்று தங்கம் விலை பவுன் ரூ.65,800-ஐ கடந்து மற்றுமொரு புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது. இந்த புதிய உச்சம் திருமணம் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளுக்காக தங்கம் வாங்கும் சாமானிய மக்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## சென்னை அருகே 2,000 ஏக்கரில் புதிதாக நகரம் அமைக்கப்படும்

### தமிழக பட்ஜெட்டில் அறிவிப்பு

**சென்னை, மார்ச் 15-**

"சென்னைக்கு அருகே சுமார் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் ஓர் புதிய நகரம் உருவாக்கப்படும் என்று தமிழக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.

2025-26-ம் நிதி ஆண்டுக்கான தமிழக பொது பட்ஜெட்டை, சட்டப்பேரவையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று (மார்ச் 14) காலை தாக்கல் செய்தார்.

ஊரக வளர்ச்சித்துறை குறித்து பேசுகையில், "சென்னை மாநகரத்தின் சமச்சீர் வளர்ச்சியை உறுதி செய்திட வடசென்னை வளர்ச்சித் திட்டம் என்ற திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 6,858 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாட்டிலேயே அதிக நகரமயமாதல் மற்றும் அதனுடன் எழும் சவால்களை சந்தித்து வரும் மாநிலங்களுள் தமிழகமும் ஒன்று. அதிலும் குறிப்பாக, சென்னை, கோவை, திருப்பூர், திருச்சி மற்றும் மதுரை போன்ற நகரங்களை நோக்கி மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர்.

எனினும் பெருநகரங்களின் விரிவாக்கம் ஆங்காங்கே நடைபெறுவதைக் காட்டிலும், பொதுமக்களின் அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்திடும் வகையில் ஒருங்கிணைந்த புதிய நகரங்களை உருவாக்குவது மிகவும் பொருத்தமானது எனும் நகரமைப்பு வல்லுநர்களின் கருத்தை ஏற்று முதற்கட்டமாக சென்னைக்கு அருகே ஓர் புதிய நகரம் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்படும்.

சமூகத்தின் உயர் வருவாய் கொண்ட வகுப்பினர், மத்திய தர வகுப்பினர் மற்றும் குறைந்த வருவாய் கொண்ட வகுப்பினர் என அனைவருக்குமான வீட்டு வசதிகள் நிறைந்த பன்னடுக்குக் கட்டடங்கள் கொண்டதாக இந்நகரம் அமையும். விரிவான சாலைகள், தகவல் தொழில்நுட்ப மற்றும் பசுமை மின்சக்தி அமைப்புகள், பகிர்ந்த பணியிடச் சேவை மற்றும் நகர்ப்புரச் சதுக்கங்கள், பூங்காக்கள் போன்ற பொழுது போக்குச் சேவை கட்டமைப்பு வசதிகளும் இந்நகரில் இடம்பெறும்.

சென்னை மாநகரை இப்புதிய நகரத்துடன் இணைத்திட உரிய சாலை வசதிகள், விரைவுப் பேருந்துகள், மெட்ரோ ரயில் விரிவாக்கம் வசதிகளுடன் ஆகியவையும் உருவாக்கப்படும். உலகத் தரகூடிய உருவாக்கிடுவதற்கான முதற்கட்டப் பணிகளை டிட்கோ நிறுவனம் விரைவில் தொடங்கும்," என்று அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



பட்ஜெட்டில் 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளதும், மத்திய அரசு மாநில அரசுக்கு வழங்க வேண்டிய நிதியை நிறுத்தி வைத்து, தனது கொள்கையை ஏற்க வேண்டும் என நிர்பந்தித்து வரும் நிலையிலும் இரு மொழிக் கொள்கையில் உறுதி காட்டி வருவதும் பாராட்டி வரவேற்றதக்கது.

- முத்தரசன்



தமிழக அரசின் ஆவணத்தில் இப்போது '₹' அடையாளத்தை நீக்கியிருக்கும் திமுக, அதே அடையாளத்தைக் கொண்டிருக்கும் கருணாநிதி நினைவு நாணயங்களையெல்லாம் வீசி எறிந்து விடுமா? என்பதற்கு பதிலளிக்க வேண்டும். இது போன்ற நடவடிக்கைகளை விட்டுவிட்டு தமிழகத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்த திமுக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- அன்புமணி



பெண்கள் மேம்படுவதற்கான திட்டம் பட்ஜெட் அறிவிப்பில் இல்லை. பென்ஷன் திட்டம் குறித்து எந்த திட்டமும் இல்லை, மின் கட்டண உயர்வு குறித்து எந்த திட்டமும் இல்லை. எதுவுமே இல்லாத ஒரு பட்ஜெட் இது. விளம்பர நோக்கில், வெற்று அரசு நடந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த வெற்று நிதி நிலை அறிக்கை உணர்த்தியுள்ளது.

- தமிழிசை



நடப்பாண்டில் ரூ.1.62 லட்சம் கோடியை தமிழக அரசு கடனாக வாங்க இருக்கிறது. நடப்பாண்டின் முடிவில் தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவர் பெயரிலும் ரூ.1.25 லட்சம் கடன் வாங்கப்பட்டிருக்கும். மொத்தத்தில் தமிழக அரசின் நிதி நிலை அறிக்கை மக்களுக்கு பயனளிக்காத, கடன்சுமையை மட்டுமே அதிகரிக்கக்கூடிய நிதிநிலை அறிக்கை ஆகும்.

- ராமதாஸ்



தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிற்கிணங்க நேரலையில் ஒளிபரப்படும் தமிழ்நாடு அரசின் 2025-2026 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை தஞ்சாவூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் அரசு ஊழியர்கள் பார்வையிட்டார்கள்.



நாகப்பட்டினம் மாவட்டம் தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம் தாமரைப்புலம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்

## புதுக்கோட்டை மாவட்ட அளவிலான வன்கொடுமை சட்டம் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழுக் கூட்டம்

### கலெக்டர் மு.அருணா தலைமையில் நடைபெற்றது



**புதுக்கோட்டை,மார்ச்.15-**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், மாவட்ட அளவிலான வன்கொடுமை சட்டம் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழுக் கூட்டம், கலெக்டர் மு.அருணா, தலைமையில் *(14.03.2025)* நடைபெற்றது. பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது;

தமிழக அரசு ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்தவகையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், வாழ்க்கை தரத்தினை உயர்த்துதல் உள்ளிட்டவைகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதன்படி, இன்றையதினம் மாவட்ட அளவிலான வன்கொடுமை சட்டம் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் பொதுமக்களுக்கு தமிழக அரசின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் குறித்தும், புதுக்கோட்டை மாவட்டத்தில் வன்கொடுமை சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகள் குறித்தும், அதன்மீது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. எனவே, பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடும் வகையில் பணிகளை மேற்கொள்ள தொடர்புடைய அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது எனவும் கலெக்டர் மு.அருணா, தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா, இ.கா.ப., , மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன் , வருவாய் கோட்டாட்சியர்கள் செல்வி. பா.ஐஸ்வர்யா (புதுக்கோட்டை), ச.சிவக்குமார் (அறந்தாங்கி), அ.அக்பர்அலி (இலுப்பூர்), மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் க.ஸ்ரீதர் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் 2025-26ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை நேரலையாக 14 இடங்களில் ஒளிபரப்பு



**பெரம்பலூர்,மார்ச்.15-**

தமிழ்நாடு அரசின் *2025-26* ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களால் சென்னை தலைமை செயலகத்தில் உள்ள தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் *(14.03.2025)* தாக்கல் செய்யப்பட்டது. இச்சிறப்பு வாய்ந்த *2025-26* ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை நிகழ்வினை நேரலையாக பெரம்பலூர் மாவட்டத்தின் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் பொதுமக்கள் காணும் வகையில் *14* இடங்களில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட தமிழ்நாடு அரசின் *2025-2026*ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மகளிர் நலன் காக்கும் மாபெரும் திட்டங்கள், ததும்பி வழியும் தமிழ்ப் பெருமிதம், இளைஞர்களுக்கு உலகை வெல்லும் உயர் தொழில்நுட்பம், தமிழ்நாடெங்கும் வேலை வாய்ப்புகளை அள்ளித்தரும் தொழிற்பூங்காக்கள், புதிய நகரம், புதிய விமான நிலையம், புதிய நீர்த்தேக்கம், அதிவேக ரயில் சேவை உள்ளிட்ட பல்வேறு சிறப்பம்சங்கள் தொடர்பாக அறிவிக்கப்பட்டது.

இச்சிறப்பு அம்சங்களில் ஒன்றான பெரம்பலூர் மாவட்டத்திற்கு புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்பும், நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிடும் முன்முயற்சிகள், விளிம்பு நிலை மக்களை அரவணைக்கும் எண்ணற்ற திட்டங்கள், மாணவர்களின் பசிப்பிணி போக்கும் காலை உணவுத் திட்டம், இதுவரை கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறாதவர்களுக்கு உரிமைதொகை வழங்குதல், மகளிர் நலன் பேணிக் காக்கும் தொழில் முனைவோர் திட்டங்கள், உயர்கல்வியை ஊக்குவிக்கும் திட்டங்கள் மற்றும் கல்லூரிகள், பழங்குடியினர் வாழ்வாதார கொள்கை, உள்ளிட்ட அறிவிப்புகள் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களால் அறிவிக்கப்பட்டதை செய்தி மக்கள் தொடர்பு துறையின் அதிநவீன மின்னணு வீடியோ வாகனத்தின் மூலம் புதிய பேருந்து நிலையத்தில் திரையிடப்பட்டதை சுமார் *200*க்கும் மேற்பட்ட நபர்களும், தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தில் திரையிடப்பட்டதை சுமார் *2,000*க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளும், குரும்பலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் திரையிடப்பட்டதை சுமார் *600*க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளும் பார்வையிட்டனர்.

மேலும், பெரம்பலூர் நகராட்சியின் சார்பில் பெரம்பலூர் நகராட்சி அலுவலகம், புதிய பேருந்து நிலையத்திலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறையின் மூலம் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கொளக்காநத்தம், மேலமாத்தூர், பாடாலூரிலும், வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட எறையூர், வாலிகண்டபுரத்திலும், வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அகரம்சீகூரிலும், பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிறுவாச்சூர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் உள்ளிட்ட *14* இடங்களில் நேரலையில் ஒளிபரப்பு செய்யப்பட்டது. இந்நிகழ்வுகளை ஏராளமான பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் ஆர்வமுடன் பார்வையிட்டனர். தமிழ்நாடு முதலமைச்சர் கூறியது போன்ற 'எல்லோர்க்கும் எல்லாம்' எனும் உயரிய நோக்கத்துடன் தமிழ்நாட்டின் மேம்பட்ட எதிர்கால வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளமாக தமிழ்நாடு பட்ஜெட் *2025* அமைத்துள்ளதாக நேரலையில் பார்வையிட்ட பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் பெரும்பாலோனோர் தெரிவித்தனர்.

## பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கரூர் கலெக்டரிடம் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் மனு



**கரூர்,மார்ச்.15-**

கரூர் மாவட்டம் கரூர் கிருஷ்ணராயபுரம் அரவக்குறிச்சி உள்ளிட்ட சட்டமன்ற தொகுதிகளில் வாக்காளர் பட்டியலில் இறப்பு இரட்டைப் பதிவு மற்றும் முகவரி தெரியாத வாக்காளர்கள் பெயர்களை நீக்கக் கோரியும் பொது மக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் அமைந்துள்ள கான்கிரீட் தளத்தை சரி செய்தல் சம்மந்தமாகவும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கரூர் கலெக்டரிடம் முன்னாள் அமைச்சர் கரூர் மாவட்ட செயலாளர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் மனு அளித்தார்

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது கரூர் மாவட்டத்திற்கு உட்பட்ட கரூர் கிரு-்ணராயபுரம் அரவக்குறிச்சி உள்ளிட்ட சட்டமன்ற தொகுதிகளில் இறப்பு இரட்டை பதிவு முகவரி தெரியாத வாக்காளர்களின் பெயர்களை நீக்கக்கோரி அதன் விவரங்களை தமிழக தலைமை தேர்தல் அதிகாரி மாவட்ட கலெக்டர் குளித்தலை வருவாய் கோட்டாட்சியர் கரூர் வருவாய் கோட்டாட்சியர் என அனைவரிடமும் ஏற்கனவே கடிதம் மூலம் வழங்கியுள்ளோம் அதன் பின்பும் வாக்காளர் பட்டியலில் முழுமையாக நீக்கம் செய்யப்படமல் அவர்களது பெயர்கள் வாக்காளர் பட்டியலில் தொடர்ச்சியாக இடம் பெற்றுள்ளது

தற்போது நாங்கள் கள ஆய்வு செய்து இறப்பு இரட்டை பதிவு முகவரி தெரியாத வாக்காளர்களின் பெயர்களையும் இம்மனுவுடன் இணைத்துள்ளோம் எனவே தாங்கள் அதிகாரிகளுடன் நேரடியாக கள ஆய்வு செய்து முழுமையாக நீக்கம் செய்திட வேண்டும் நீக்கம் செய்ய இயலாத வாக்காளர்களின் பெயர்களையும் அதற்குரிய காரணத்துடன் எங்களுக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவித்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் என்றும் மற்றொரு மனுவில் கரூர் கோவை தேசிய நெடுஞ்சாலையில் ஈரோடு பிரிவு சாலையின் நடுவில் புதிதாக உயர் மின் விளக்கு அமைக்க போடப்பட்டுள்ள கான்கிரீட் தளம் சாலையில் ஒரு அடி உயரத்தில் பொதுமக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது

மேலும் கரூர் கோவை சாலையின் இடதுபுறம் உள்ள வாய்க்கால் பாலத்தின் அருகே சாலை மற்றும் அதன் ஓரங்களில் குழிகளாக உள்ளது இதனால் இருசக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் செல்லும்போது விபத்துகள் ஏற்படுகின்றன குறிப்பாக வயதானவர்கள் பெண்கள் இருசக்கர வாகனத்தில் பின்புறம் அமர்ந்து பயணம் செய்பவர்கள் தடுமாறி கீழே விழுந்து அதிகமான விபத்துகள் ஏற்படுகின்றது எனவே குழிகள் மற்றும் கான்கிரீட் தளத்தினை சரிசெய்து உயர் மின் விளக்குகள் அமைக்கவும் இல்லையெனில் அந்த கான்கிரீட் தளத்தை அகற்றி விட்டு கரூர் கோவை தேசிய நெடுஞ்சாலையில் ஈரோடு பிரிவு சாலையை சரிசெய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம் இவ்வாறு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது

## திருவாரூரில் சகி பெண்களுக்கான ஒருங்கிணைந்த சேவை மையத்தில் கலெக்டர் வ.மோகனச்சந்திரன் ஆய்வு




**திருவாரூர்,மார்ச்.15-**

திருவாரூர் மாவட்டம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கிராமிய சுய வேலை வாய்ப்பு பயிற்சி மையம் மற்றும் திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செயல்படும் "சகி" பெண்களுக்கான ஒருங்கிணைந்த சேவை மையத்தினை திருவாரூர் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

திருவாரூர் மாவட்டம், பவித்திரமாணிக்கத்தில் அமைந்துள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கிராமிய சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையத்தினை பார்வையிட்டு *2024-2025*ஆம் ஆண்டிற்கான பயிற்சி விவரங்கள் மற்றும் சுளுநுவுஐ-யில் பயிற்சி பெற்று தற்போது வெற்றிகரமாக தொழில் செய்துகொண்டிருக்கும் நபர்கள் பற்றிய விவரங்களை கேட்டறிந்தார். *2025-2026*ம் ஆண்டிற்கான பயிற்சி தொடர்பான ஆலோசனைகளை திருவாரூர் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், வழங்கினார்.

தொடர்ந்து, திருவாரூர் மாவட்ட மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலம் பெண்களின் நலனுக்கான 'சகி' என்ற பெயரில் பெண்களுக்கான ஒருங்கிணைந்த மையத்தில் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், திடீர் ஆய்வு மேற்கொண்டு இம்மையத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள மீட்பு சேவைகள் மற்றும் அவசர நடவடிக்கைகள் குறித்தும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சேவைகள் குறித்தும், தேவைப்படும் பட்சத்தில் பாதிக்கப்படும் பெண்களுக்கு அவர்களின் ஒப்புதலின்படி காவல்துறை உதவியுடன் முதல் கட்ட தகவல் அறிக்கை மற்றும் சிஎஸ்ஆர் முதலிய வழங்கிய விவரங்கள் குறித்தும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அவர்களின் மனநிலைக்கு ஏற்றவாறு உளவியால் ரீதியாக ஆலோசனை மற்றும் உதவிகள் வழங்கிய விவரங்கள் குறித்தும், மகளிர் உதவி எண் மூலம் பெறப்பட்ட புகார் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் கேட்டறிந்தார்கள்.

இந்நிகழ்வில், சுளுநுவுஐ-யில் பயிற்சி மைய இயக்குநர் கணேஷ், சகி மைய நிர்வாகி மற்றும் மைய பணியாளர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## காடுவெட்டி நடுநிலைப்பள்ளி ஆண்டு விழா எம்எல்ஏ தியாகராஜன் தலைமையில் நடைபெற்றது



**தொட்டியம்,மார்ச்.15-**

தொட்டியம் ஒன்றியம் காடுவெட்டியில் நூறு ஆண்டுகளைக் கடந்த ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், பள்ளி ஆண்டு விழா நடைபெற்றது. பள்ளியின் தலைமை ஆசிரியர் சரோஜா வரவேற்றார். வட்டார கல்வி அலுவலர் சேகர், தொட்டியம் யூனியன் முன்னாள் துணைச்சேர்மன் சத்தியமூர்த்தி வட்டார வள மேற்பார்வையாளர் சக்திவேல் முன்னிலை வகித்தனர். இதில் இலக்கிய, விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றிய முசிறி எம்எல்ஏ காடுவெட்டி ந.தியாகராஜன் பேசும் போது இங்கு பள்ளி மாணவிகள் கலை நிகழ்ச்சிகள் நடத்துகிறீர்கள். தற்போதைய தமிழக அரசு கலை நிகழ்ச்சிகளுக்கும் விழாக்கள் நடத்தி மாநில அளவில் பரிசுகள் வழங்குகிறது. அரசு பள்ளியில் படித்து மாணவர்கள் சிறப்பிடம் பெற்றால் உயர் கல்வி வரை கல்விக்கு எந்த செலவும் இல்லை என்றார். பள்ளி ஆசிரியர்கள் பரமேஸ்வரி, சுரேஷ், திலகவதி, ஊ.சரவணன், மாலதி, ஜெயராமன், பாரதி, உத்திரமேரி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் புவனேஸ்வரி, சிவசங்கரன் அப்பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் துவாரகன், மேலாண்மை கல்வி குழு தலைவர் கவிதா உள்ளிட்ட உறுப்பினர்கள் அருகிலுள்ள பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் நிலவுச்செல்வி, ராஜன், ஆசிரியர்கள் அகல்யா, வள்ளுவன், பாண்டியன், அப்பள்ளியின் முன்னாள் மாணவர்கள் பிச்சைமுத்து, செல்வராஜ் உள்ளிட்டவர்களும், மாணவர்களுடன் பெற்றோர்களும் கலந்து கொண்டனர் .

## கொன்னையூரில் திமுக மாவட்ட இளைஞரணி சார்பில் அன்னதானம்

**பொன்னமராவதி,மார்ச்.15-**

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அருகே கொன்னையூர் மாரியம்மன் கோவிலில் திமுக புதுக்கோட்டை தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் புதுக்கோட்டை திமுக தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வேந்தன்பட்டி இளையராஜா ஏற்பாட்டில் தமிழக முதல்வரும் திமுக தலைவருமான ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அன்னதானம் மற்றும் நலத்திட்டங்களை வழங்கப்பட்டது.தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை வைத்தார்.இந்நிகழ்வில் பொன்னமராவதி திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் அ.அடைக்கலமணி, வடக்கு ஒன்றிய செயலாளர் அ .முத்து, பேரூர் கழக செயலாளர் அ.அழகப்பன்,திமுக நிர்வாகிகள் விளையாட்டு பிரிவு நிர்வாகி ஆலவயல் சாமிநாதன், அவைத்தலைவர் தட்சிணாமூர்த்தி கழக நிர்வாகிகள் காளிதாஸ், பழனிச்சாமி, ஆலவயல் முரளி சுப்பையா, பாண்டியன், கீழதானியம் முருகேஷ், செல்வம். உள்ளிட்ட மாவட்ட,ஒன்றிய கழக நிர்வாகிகள் பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

## பாலசமுத்திரத்தில் மரக்கன்றுகள் நடும்விழா, பேரணி



**தொட்டியம்,மார்ச்.15-**

தொட்டியம் வேளாண் வட்டாரத்தில் கண்ணனூர் இமயம் வேளாண் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவிகள் தங்கி களப்பயிற்சி பெற்று வருகிறார்கள். அதன்படி முதல் நிகழ்வாக பாலசமுத்திரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டும் அப்பள்ளி மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கியும் அது குறித்து விழிப்புணர்வு பேரணியும் நடத்தினர்.

பேரணியை பாலசமுத்திரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் கீதாராணி துவக்கி வைத்தார். உதவிஆசிரியர் கல்பனா வரவேற்று பேசினார். ஆசிரியை கல்பனா தேவி உள்ளிட்டவர்கள் வாழ்த்தி பேசினர். மாணவிகள் பாரிஜாதம், நிஷா, நிதிதா, நிவேதா, பார்கவி, பிரபாஸ்ரீ, நிவாஷினி, ப்ரீத்தி, பிரியதர்ஷினி, பிரதீபா உள்ளிட்ட மாணவிகள் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் பாலசமுத்திரம் நடுநிலைப்பள்ளி மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.

## கோடை வெயிலை சமாளிக்க கூட்டு குழு அமைக்க வேண்டும்


### பாலம் சேவை நிறுவனம் தமிழக அரசுக்கு கோரிக்கை

**திருவாரூர்,மார்ச்.15-**

கோடை வெயிலை சமாளிக்க கூட்டு குழு அமைக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.இது குறித்து திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி பாலம் சேவை நிறுவனச்செயலாளர் செந்தில்குமார் தமிழ்நாடு முதலமைச்சருக்கு அனுப்பியுள்ள மனுவில் தெரிவித்திருப்பதாவது.தமிழ்நாட்டில் கடந்த மூன்று ஆண்டுகளாக கோடைகாலத்தில் சராசரி அளவைவிட வெப்பம் அதிகரித்து வருகிறது.நடப்பாண்டு இதன் அளவு மேலும் அதிகரிக்கும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.இதை சமாளித்து மக்களை காக்கும் விதமாக முன்னேற்பாடு திட்டங்களை மார்ச் இறுதிக்குள் வழங்க அரசு கேட்டுள்ளது.அதன்படி மாவட்டந்தோறும் கலெக்டர் தலைமையிலான, சுகாதாரத்துறை,வருவாய்துறை,பேரிடர் மேலாண்மைத் துறை,வனத்துறை,தேசிய பசுமைப்படை,ரெட்கிராஸ், தொண்டு நிறுவனங்கள்,சேவை அமைப்புகள்,பள்ளிகல்வித்துறை,கல்லூரி கல்வித்துறை, காவல்துறை, தீயணைப்புத்துறை, மாநகராட்சி, நகராட்சி,பேரூராட்சி,ஊரக வளர்ச்சித் துறை, மாசுகட்டுபாடு வாரியம் அடங்கிய ஆலோசனைக்குழு அமைக்கப்பட வேண்டும்.வெப்பம் அதிகமாக பாதிக்கும் பகுதிகளில் பரப்பளவிற்கு தகுந்தார்

போல் ஆம்புலன்ஸ் சேவை தயாராக இருக்க வேண்டும்.நகர பகுதிகளில் ஒரு மருத்துவர் அடங்கிய நடமாடும் குழு காலை 6-மணி முதல் மாலை 6 மணி வரை செயல்படலாம். மக்கள் அதிகம் கூடும் இடங்களில் குடிநீர் வழங்கலாம். சேவை அமைப்புகள் மூலம் தண்ணீர் பந்தல்,மோர், பழரசங்கள் வழங்க ஏற்பாடு செய்யலாம்.காலை பத்துமணி முதல் மாலை மூன்று மணி வரை தேவையில்லாமல் வெளியில் செல்வதை தவிர்க்கவும் வெளியில் செல்லும் போது தண்ணீர் எடுத்துச் செல்லவேண்டும்.பச்சிளம் குழந்தைகள்,முதியோர்களை பாதுகாத்திடவும் விழிப்புணர்வு செய்யலாம்.வர்த்தக நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்கு நிழல் பந்தள் அமைக்கலாம்.நிழல்குடையில்லாத மக்கள் கூடும் இடங்களில் கிரீன் நெட் பந்தல் அமைக்கலாம்.குப்பைகளை எரியூட்டவேண்டாம்.ஆறு, ஏரி, குளங்களில் தண்ணீரை இறைக்க வேண்டாம். கால்நடைகளை வீட்டிலேயே கட்டிவைத்து பராமரிக்க வேண்டும். வெயிலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்க மருத்துவமனைகளில் தனி வார்டு அமைக்க வேண்டும்.வெயிலின் தாக்கத்தால் பாதிக்கப்படுபவர்களுக்கும், கால்நடைகளுக்கும்.தனிக் காப்பீடு வேண்டும் இது போன்ற ஆலோசனைகளை பரிசீலித்து செயல்படுத்திட முதல்வரை பாலம்சேவை நிறுவனச்செயலாளர் செந்தில்குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

## சுவாமிமலையில் தமிழக பட்ஜெட் நேரடி ஒளிபரப்பு



**தஞ்சாவூர்,மார்ச்.15-**

சுவாமிமலை சன்னதி தெரு, பேருந்து நிலையத்தில் தமிழக பட்ஜெட் 2025-26 சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதை முன்னிட்டு நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. இதில் பேரூராட்சி மன்ற செயல் அலுவலர் ப. சரவணவேல், பேரூராட்சி மன்ற தலைவர் வைஜெயந்தி சிவகுமார், திமுக நகரச் செயலாளர் எஸ்.எம்.எஸ். பாலசுப்பிரமணியன் மற்றும் வார்டு உறுப்பினர்கள்,பேரூராட்சி பணியாளர்கள், திமுக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு பார்வையிட்டனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# புத்தகத் திருவிழா தொடர்பான மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

## கலெக்டர் பொ.ரத்தினசாமி தலைமையில் நடைபெற்றது



**அரியலூர்,மார்ச்.15-**
அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், அரியலூர் புத்தகத் திருவிழா தொடர்பான மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் கலெக்டர் பொ.இரத்தினசாமி, தலைமையில் (14.03.2025) நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள புத்தகத் திருவிழா தொடர்பாக மாவட்ட நிலை அலுவலர்களுடனான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெற்றது. இப்புத்தக கண்காட்சியில் அரசு முக்கிய துறைகள் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டு காட்சிப் படுத்தப்படவுள்ளது. 10 நாட்கள் நடைபெறவுள்ள இப்புத்தக திருவிழாவினை சிறப்பாக நடத்திட அனைத்துத்துறை அலுவலர்களும் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்ற வேண்டும். தினந்தோறும் அதிக அளவிலான பொதுமக்கள். மாணவ, மாணவிகள் வந்து செல்லவுள்ளதால் அவர்களுக்கு தேவையான அளவு குடிநீர், கழிப்பறை வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். புத்தகத் திருவிழா நடைபெறும் வளாகத்தை தினந்தோறும் தூய்மை செய்திட பணியாளர்களை நியமிக்க செயல்பட வேண்டும். அதிக அளவில் மாணவ, மாணவிகள் புத்தகத் திருவிழாவை கண்டுகளிக்க உரிய ஏற்பாடுகள் செய்திட வேண்டும். மேடை அமைப்பு, பந்தல் உள்ளிட்டவைகளை பொதுப்பணித்துறையினர் ஆய்வு செய்து, உறுதித் சான்று வழங்கிட வேண்டும்.

இப்புத்தக திருவிழாவிற்கு வருகைதரும் சிறப்பு பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்களை அழைத்து வருவதற்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ள பணிகளை சிறப்பாக மேற்கொள்ளவும், முன்னணி புத்தகப் பதிப்பகங்களின் அரங்குகள் அமைத்திடவும், முன்னணி பேச்சாளர்கள் மற்றும் நெறியாளர்களை கொண்டு சொற்பொழிவுகள் மற்றும் பட்டிமன்றங்கள் நடத்திடவும், அனைத்து பொதுமக்கள் மற்றும் குழந்தைகளும் கலந்து கொள்ளும் வகையில் போட்டிகள் நடத்திடவும், குழந்தைகளுக்கு தேவையான பொழுது போக்கு அம்சங்கள், உணவு கங்கள் அமைத்திடுதல், புத்தகத் திருவிழா அரங்க வளாகத்தில் தற்காலிக மருத்துவ முகாம் ஏற்படுத்திட வேண்டும் எனவும், மாணாக்கர்களிடையே வாசிப்புத் திறனை மேம்படுத்துவதே இப்புத்தகத் திருவிழாவின் நோக்கமாகும். எனவே, அரியலூர் மாவட்டத்தில் நடைபெறவுள்ள புத்தகத் திருவிழாவினை மிகச்சிறப்பாக நடத்திட அனைத்துத்துறை அலுவலர்களும் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என கலெக்டர் பொ.இரத்தினசாமி, இ.ஆ.ப., அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் க.ரா.மல்லிகா, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் ரவிச்சந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பரிமளம், அனைத்துத் துறை மாவட்ட நிலை அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


# நாகப்பட்டினம் மாவட்டத்தில் முதல்வர் மருந்தங்களில் 25 சதவீத தள்ளுபடியுடன் தரமான மருந்து, மாத்திரைகள் கிடைப்பதால் எங்களை போன்றோர்களுக்கு வரபிரசாதமாக அமைந்துள்ளது

## பயனடைந்தோர் நிறைந்தது மனம் நிகழ்வில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி

**நாகப்பட்டினம்,மார்ச்.15-**
மாவட்டம் நாகப்பட்டினம் புதிய பேருந்து நிலையம் மற்றும் நாகூர் மெயின் ரோட்டில் உள்ள முதல்வர் மருந்தகங்கள் மூலம் வெளிச்சந்தை விலையைக்காட்டிலும் 75 சதவீதம் குறைவாகவும், 25 சதவீதம் தள்ளுபடி பெற்று பயனடைந்த பயனாளிகளிடம் நிறைந்தது மனம் திட்டத்தின் கீழ் கலெக்டர் ப.ஆகாஷ், பயன்கள் குறித்து கலந்துரையாடினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் கூட்டுறவுத்துறை சார்பில் தமிழ்நாடு முழுவதும் 1000 முதல்வர் மருந்தகங்கள் திறந்து வைக்கப்பட்டது. அதில், நாகப்பட்டினம் மாவட்டத்தில் வேதாரண்யம் வட்டம் கருப்பம்புலம், கத்தரிப்புலம் மருதூர் வடக்கு நாகப்பட்டினம் புதிய பேருந்து நிலையம், நாகூர் மெயின்ரோடு(சந்திரா கார்டன்), சிக்கல் மற்றும் கீழ்வேளூர் ஆகிய 7 இடங்களில் தொழில் முனைவோர்கள் நடத்தும் மருந்தகங்களும், கூட்டுறவு நிறுவனங்கள்





நாகப்பட்டினம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, வேதாரண்யம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் புத்தகரம், வேளாங்கண்ணி மற்றும் கங்களாஞ்சேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் ஆகிய 5 இடங்களில் நடத்தும் மருந்தகங்களும் என மொத்தம் 12 மருந்தகங்கள் திறந்து வைக்கப்பட்டு மக்களுக்கு சிறந்த சேவை வழங்கி வருகிறது.

அதன்படி முதல்வர் மருந்தகமானது வெளிச்சந்தை விலையைக்காட்டிலும் 75 மூ குறைவாகவும், 25 மூ தள்ளுபடியிலும், ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்களுக்கு ஜெனரிக் மருந்துகள், பிராண்டட் மருந்துகள் மற்றும் சித்தா ஆயுர்வேதிக் மற்றும் யுனானி மருந்துகள் தரமானதாகவும் குறைவான விலையிலும் கிடைத்திடும் வகையில் செயல்பட்டு வருகிறது. பொதுமக்கள் முதல்வர் மருந்தகங்களில் வெளிச்சந்தை மதிப்பைவிட குறைந்த விலையில் மருந்துகளை வாங்கி பயனடைய வேண்டும்.

செய்யது கலிபா சாஹூ முதல்வர் மருந்தகத்தின் பயன்கள் குறித்து மாவட்ட கலெக்டர் அவர்களிடம் நிறைந்த மனதுடன் தெரிவித்ததாவது:

எனது பெயர் செய்யது கலிபா சாஹூ நான் நாகூரில் வசித்து வருகிறேன். நான் திருமண அமைப்பாளராக உள்ளேன். மேலும், நான் இருதயகோளாறு காரணமாக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறேன். நான் மாதம் மாதம் 3000 ரூபாய்க்கு தனியார் மருந்தகத்தில் மருந்து மாத்திரைகளை வாங்குகிறேன். தற்போது தமிழ்நாடு அரசு முதல்வர் மருந்தகம் எங்கள் ஊரில் திறக்கப்பட்டுள்ளது.



இந்த மருந்தகத்தில் வாங்கும் மருந்துகளுக்கு 25மூ தள்ளுபடி வழங்கப்படுகிறது. இதன் மூலம் எனக்கு மாதம் 750 ரூபாய் மிச்சமாகிறது. இதன் மூலம் எனது குடும்பம் செலவிற்கு உதவியாக உள்ளது. முதல்வர் மருந்தகம் ஏழை, எளிய மக்களுக்கு வரபிரசாதமாக அமைந்துள்ளது. இம்மருந்தகத்தை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது நெஞ்சம் நிறைந்த மனதுடன் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்**
**நாகப்பட்டினம் மாவட்டம்.**

# தமிழகத்தில் சிறப்பாக பணிபுரிந்த காவலர்களை பாராட்டி சான்றிதழ் மற்றும் வெகுமதி: போலீஸ் டிஜிபி வழங்கினார்

**சென்னை,மார்ச்.15**
பண்ருட்டி போக்குவரத்து காவல் நிலையத்தில் திரு. தேவநாதன் (50) த/பெ சுந்தரம், தோட்டப்பட்டு என்பவர் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார். (10.03.2025) அன்று, நண்பகல் 12:30 மணியளவில், பண்ருட்டி நான்குமனை சாலை சந்திப்பில் போக்குவரத்தை சரி செய்துகொண்டிருந்தபோது, மூதாட்டி ஒருவர் அந்த வழியாக ஆம்புலன்ஸ் வாகனம் வருவதை கவணிக்காமல் சாலையை கடக்க முயற்சித்துள்ளார். விரைவாகச் செயல்பட்டு, அவர் உடனடியாக அவரது கையைப் பிடித்து நிறுத்தி, அவரது பாதுகாப்பை உறுதி செய்தார். ஆம்புலன்ஸ் கடந்து சென்றதும், அந்தப் பெண் பாதுகாப்பாக சாலையைக் கடக்க உதவினார், இதனால் சாத்தியமான விபத்தைத் தவிர்த்தார்.ஆ) தஞ்சாவூர் மாவட்ட காவல்துறையின் விரைவான நடவடிக்கை, கொலை செய்த சந்தேக நபர்களை கைது செய்ய வழிவகுத்தது. 08.03.2025 ஆம் தேதி சுமார் 14.45 மணி அளவில் நாகப்பட்டினம் மாவட்டம் வேளங்கண்ணி காவல் நிலைய எல்லைக்குப்பட்ட கருவைக்காடு, வேளாங்கண்ணி இரயில் நிலையம் அருகில் அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் ஜனார்த்தனன் (22) பெங்களூரில் வசிந்தவர் கொலை செய்து விட்டு சந்தேக நபர்கள் தஞ்சாவூர் நோக்கி ரயிலில் ஏறி அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

பின்னர், நாகப்பட்டினம் மாவட்ட சிறப்புப் பிரிவு ஆய்வாளர் திரு. ஆனந்தராஜன், சந்தேக நபர்களின் உடைகுறிப்புடன் கூடிய தகவலை உடனடியாக தஞ்சாவூர் மாவட்ட சிறப்புப் பிரிவு ஆய்வாளர் திரு. ராமதாஸிடம் தெரிவித்தார். இந்தத் தகவலின் பேரில், தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில், தஞ்சாவூர் நகர தனிபிரிவு காவலர்களும் மற்றும் மாவட்ட சிறப்புத் தனிப்படை அலுவலகர்களும் உடனடியாக நடவடிக்கையில் இறங்கினர்தஞ்சாவூர் ரயில் நிலையத்தில் உள்ள அனைத்து நடைமேடைகள் மற்றும் ரயில்களிலும் முழுமையான சோதனை நடத்தப்பட்டு, பயணிகளுக்கு இடையூறு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கையின் போது, ரயில் நிலையத்தின் பின்புற வாசல் வழியாக தப்பிச் செல்ல முயன்ற இரண்டு நபர்களை தடுத்து நிறுத்தி விசாரித்தனர். சரிபார்த்ததில், அவர்கள் கர்நாடகாவைச் சேர்ந்தவர்கள் என்பது கண்டறியப்பட்டு, அவர்களின் அடையாளம் கண்டறியப்பட்டது. நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணி கொலை வழக்கில் இருவரும் தொடர்புடையவர்கள் என்பது உறுதி செய்யப்பட்டது. உடனடியாக வேளாங்கண்ணி போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, குற்றவாளிகள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். தஞ்சாவூர் மாவட்ட தனிப்படையினர் துரிதமாக செயல்பட்டு தகவல் தெரிந்த ஒரு மணி நேரத்திற்குள் எதிரிகளை கைது செய்தது பாராட்டுக்குரியது. மேற்படி காவல்துறை அதிகாரிகள் மற்றும் ஆளினர்களின் முன் மாதிரியான அர்பணிப்பு, துணிச்சல் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புக்கான அர்பணிப்பு ஆகியவற்றை பாராட்டி காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், (14.03.2025) சென்னை காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில் வைத்து பாராட்டுச் சான்றிதழ் மற்றும் வெகுமதி வழங்கினார்.

# வலங்கைமானில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்ட தமிழ்நாடு பட்ஜெட்



**வலங்கைமான்,மார்ச்.15-**
தமிழக சட்டமன்றத்தில் தமிழ்நாடு பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டதை முன்னிட்டு வலங்கைமான் பேரூராட்சியில் சீரணி கலையரங்கத்தில் தமிழ்நாடு அரசின் 2025-26 பட்ஜெட் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. இதனை பேரூராட்சி மன்ற தலைவர் சர்மிளா சிவனேசன், துணைத்தலைவர் தனித் தமிழ்மாறன், பேரூராட்சி மன்ற செயலாளர் சரவணன் மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், திமுக நிர்வாகிகள் பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# சென்னையில் பிரபல ரவுடி ரூபன் கைது

**சென்னை மார்ச் 15-**
சென்னை பேசின் பிரிட்ஜ் பகுதியைச் சேர்ந்த பிரபல ரவுடி ரூபனை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். வழக்கு விசாரணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த ரூபன் தனிப்படை போலீசாரால் கைது செய்யப்பட்டார். 3 கொலை உட்பட 11 வழக்குகளில் தொடர்புடையவர் ரவுடி ரூபன் என போலீசார் தகவல் தெரிவித்தனர்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே...
பேசுவது எமனாக இருக்கலாம்

# உணவு பொருட்களில் தரத்தை உறுதி செய்ய அக்மார்க் முத்திரை கட்டாயமாக்க வேண்டும்

## நுகர்வோர் பாதுகாப்பு மையம் கோரிக்கை

**திருவாரூர்,மார்ச்.15-**
உலக நுகர்வோர் தினத்தையட்டி தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மையம், தமிழ்நாடு,பாண்டிச்சேரி நுகர்வோர் குழுக்களின் கூட்டமைப்பு, கன்சியூமர் கான்பெடரேஷன் ஆப் இந்தியா,எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம்,பாரதமாதா குடும்ப நல நிறுவனம்,உணவுப் பாதுகாப்புத்துறை,ஸ்ரீ லட்சுமி நாராயண கூட்டுறவு நகர வங்கி,ஸ்ரீ கமலாம்பிகா கூட்டுறவு நகர வங்கி,தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு மொத்த பண்டகசாலை,இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம், பாரத ஸ்டேட் வங்கி ஆகிய அமைப்புகள் இணைந்து நுகர்வோர் உரிமை மற்றும் உணவு பாதுகாப்பின் முக்கியத்துவத்தை மக்களிடம் எடுத்துச் சொல்லும் விதமாகவும்,அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் உணவு தரச்சான்றுகளைப் பெற்று தரமான பொருட்களை கிடைக்க வைக்கும் நோக்கில் நுகர்வோர் நலனை பாதுகாக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தும் வகையில் நடைபெற்றது.இவ்விழா திருவாரூரில் தனியார் கல்லூ£ரியில் நடைபெற்றது.நிகழ்ச்சியில் தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மையத்தின் பெருந்தலைவர் அழகிரிசாமி, பொதுச்செயலாளர் ரமேஷ், கல்லூரி முதல்வர் மீனாட்சி சுந்தரம்,புதுடில்லி கன்சியூமர் கான்பெடரேஷன் ஆப் இந்தியாவின் தலைவர் டாக்டர் செல்வராஜ்,மாவட்ட உணவுப் பாதுகாப்புத்துறை அலுவலர் அன்பழகன்,இந்திய நுகர்வோர் சம்மேளன தேசிய பொதுச்செயலாளர் திருநாவுக்கரசு, நுகர்வோர் கூட்டுறவு மொத்த பண்டகசாலை மேலாளர் காளிதாஸ்,எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகத்தின் அலுவலர் முருகானந்தம்,பாரத் கல்வி குழுமத் தாளாளர் காலை கதிரவன்,சிசிஐ தேசிய துணைத் தலைவர் செல்வம்,பாரத மாதா தொண்டு நிறுவன நிர்வாக இயக்குநர் மணிமாறன், மையத்தின் துணை தலைவர் பாலசுப்பிரமணியன்,பயிற்சி இயக்குநர் செல்வகுமார்,சுற்றுச்சூழல் இயக்குநர்கள் தர்மதாஸ்,சக்திவேல்,வேதியியல் ஆய்வாளர்கள் அகிலன்,மோகன், குமாரவேலு, ஆசிரியர்கள் ஆறுமுகம்,வைத்தியநாதன் உள்ளிட்ட 300-க்கும் மேற்பட்ட நுகர்வோர் ஆர்வலர்கள்,கல்வியாளர்கள்,அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் விழாவில் கலந்து கொண்டனர்.உணவு பொருட்களின் தரத்தை உறுதி செய்ய அக்மார்க் முத்திரை கட்டாயமாக்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.விழா நிறைவில் பாஸ்கர் நன்றி கூறினார்.

தமிழ்நாடு அரசு
**திருநின்றவூர் நகராட்சி**
ந.க.எண்.1404/2024/இ1 **நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை** நாள்.13.03.2025
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
திருநின்றவூர் நகராட்சி பகுதியில் 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2022-2023-ஆம் நிதி ஆண்டுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட திடக்கழிவு மேலாண்மை மான்ய நிதியின் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் மேற்கொள்ள ஆணையாளர் அல்லது அவரால் அங்கீகாரம் அளிக்கப்பட்டவரால் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து **27.03.2025 வியாழன் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை** மின்னனு (E-Tender) முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது. **ரூ.99.00 இலட்சம்** மதிப்பீட்டில் வார்டு எண்.21, அன்னை இந்திரா நகர் பகுதியில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை http://www.tntenders.gov.in என்ற இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி பதிவேற்றம் செய்தவர்களின் டேவணித் தொகை வரையோலையாக ஒப்பந்தப்புள்ளி பெற நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் இவ்வலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். ஒப்பந்ததாரர் தகுதி குறித்து விவரங்களை ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம். மேலும் இது குறித்தான விவரம் தேவைப்பட்டால் அலுவலக நாட்களில் வேலை நேரத்தில் நகராட்சி அலுவலகத்தில் நேரில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.
**ஒப்பந்தப்புள்ளிகள் நேரம் மற்றும் நாள்.**

| | | |
|---|---|---|
| 1. ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய தொடக்க நாள் | : | **19.03.2025 காலை 10.00 முதல்** |
| 2. ஒப்பந்ததாரர்களுடனான முன்கலந்தாய்வு கூட்டம் | : | **19.03.2025 மாலை 3.00 மணி** |
| 3. ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்து கொள்ள கடைசி நாள் | : | **27.03.2025 மாலை 3.00 வரை** |
| 4. ஒப்பந்தப்புள்ளி சமர்பிக்கப்படவேண்டிய கடைசி நாள் (Online) | : | **27.03.2025 மாலை 3.00 வரை** |
| 5.தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் (Technical bid) | : | **27.03.2025 மாலை 3.30 மணி** |

ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும். தொழில்நுட்ப உறைகளை பரிசீலித்தபிறகு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளிகள் அடங்கிய உறை திறக்கும் நாள் அறிவிக்கப்படும்.
**ஆணையர்**
திருநின்றவூர் நகராட்சி
செ.ம.தொ.இ/1025/ஒப்பந்தப்புள்ளி/2025

**உதவி ஆட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், குளித்தலை.**
**ஒ.மு.அ2/821/2025**

சி.மலையாளம்,
த/பெ.சின்னதுரை,
67,மேல குறிச்சி,
நங்க வரம் தெற்கு –2 கிராமம்,
குளித்தலை வட்டம்,
கரூர் மாவட்டம்.
– மனுதாரர்
– எதிர் –
வட்டாட்சியர், குளித்தலை.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு
மேற்படி மனுதாரரின் தாத்தா “முத்து” என்பவர் மேற்படி விலாசத்தில் கடந்த 05.04.2000 ஆம் ஆண்டு இறந்தார் என்பதை பதிவு செய்யக்கோரி மனு செய்துள்ளார் இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் தங்களது ஆட்சேபனைகளை 7 தினங்களுக்குள் மேற்படி நீதிமன்றத்திடம் தெரிவித்துக் கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக உத்தரவாகி விடும் என்பதை அறியவும்.

**சி.மலையாளம்,**
**மனுதாரர், குளித்தலை.**

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், கரூர்**

பெ.ரமேஷ், த/பெ.பெருமாள்,
11/102, வெள்ளாளர் தெரு,
பஞ்சமாதேவி,
மண்மங்கலம் தாலுக்கா,
கரூர் மாவட்டம்.
– மனுதாரர்
– எதிர் –
வட்டாட்சியர், மண்மங்கலம்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு
மேற்படி மனுதாரர், பெ.ரமேஷ் தனது பாட்டான், “ராமசாமி” த/பெ. சுப்பராயன், என்பவர், கொங்கு வெள்ளாளர் தெரு, ஓடையூர், குப்புச்சிப்பாளையம், மண்மங்கலம் என்கின்ற விலாசத்தில் கடந்த 03.07.1976 அன்று இறந்தார் என்பதை பதிவு செய்ய கோரி மனு செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் தங்களது ஆட்சேபனைகளை 15 தினங்களுக்குள் மேற்படி நீதிமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளலாம் தவறும் பட்சத்தில் ஒருதலைபட்சமாக உத்திரவாகி விடும் என்பதை அறியவும்

**பெ.ரமேஷ்**
**மனுதாரர், பஞ்சமாதேவி.**

**மாண்புமிகு முதன்மை சார்பு நீதிமன்றம், கும்பகோணம்**
**U/F AS வழக்கு எண். /2025**
**இடைக்கால மனு எண் 80/2024**

மணிமுத்து
– மனுதாரர் /மேல்முறையீட்டாளர்
– எதிராக –
1. உதவி ஆய்வாளர் நிர்வாக அலுவலர், சுவாமிமலை சுவாமிநாத கோயில் நிர்வாகம்,
2. மாரியப்பன்,
3. ஆறுமுகம்,
4. அய்யாதுரை.
– எதிர்மனுதாரர்கள்

மனுதாரர் தரப்பில் கொடுத்த அறிவிப்பு
மேற்கண்ட எனது கட்சிக்காரர் கொடுத்த தகவலின் அடிப்படையில் இந்த அறிவிப்பானது மேற்கண்ட வழக்கில் 2ஆம் எதிர்மனுதாரர் ஆகிய தங்களுக்கு கொடுக்கப்படுகிறது. எனது கட்சிக்காரர் தங்களுக்கு எதிராக கனம் மாண்பமை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீடு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அந்த வழக்கு தேதியில் 21.01.2025 2ஆம் எதிர்மனுதாரர் ஆகிய தாங்கள் நேரில் வந்து நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு பிறப்பித்தது. தாங்கள் மேற்கண்ட தேதியில் கனம் நீதிமன்ற நேரில் ஆஜராகாததால் இந்த பத்திரிக்கை மூலம் அறிவிப்பு வழங்கிட கனம் நீதிமன்ற பிறப்பித்த உத்தரவு படி எதிர்வரும் 18/3/2025 ஆம் தேதிக்கு காலை 10.30 மணி அளவில் கனம் நீதிமன்றத்தில் நேரில் வந்து ஆஜராக வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**K.அனுசுயா, B.A.,B.L.,**
**வழக்கறிஞர், கும்பகோணம்.**

**கனம் உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் மன்னார்குடி**
**த.ப.எண்.67/2025**

மாலா 55/2025,
த/பெ.தெட்சணாமூர்த்தி
..மனுதாரர்
/எதிர்/
வட்டாட்சியர், திருத்துறைப்பூண்டி
கிராம நிருவாக அலுவலர்,
நெடும்பலம்.
..எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு
திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுக்கா, நெடும்பலம், கோவில் சிங்களாந்தி என்ற முகவரியில் வசித்து வரும் மனுதாரர் ஆகிய நான் எனது பெற்றோர் வீட்டில் கடந்த 14.07.1970 அன்று பிறந்த விபரத்தை எதிர்மனுதாரர்கள் பதிந்து வரும் பிறப்பு பதிவேட்டில் பதிய வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு த.ப.எண். 67/2025 தொடர்பாக யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட தேதியில் இருந்து 30 நாட்களுக்குள் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
மாலா (மனுதாரர்),
தெ/பெ.தெட்சணாமூர்த்தி,
நெடும்பலம்.

**திருவாரூர் சார்பு நீதிமன்றம்,**
**அ.வ.எண்.171/2019**

சிட்டி யூனியன் வங்கி,
சன்னாநல்லூர் அதற்காக
அதன் கிளை மேலாளர்.
– வாதி
– எதிர் –
அலமேலு,
க/பெ.சாமிநாதன்,
10, திருவாரூர் மெயின் ரோடு,
மாப்பிள்ளைகுப்பம்,
நன்னிலம் தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்.
– 2–ம் பிரதிவாதி

அறிவிப்பு
மேற்படி வாதிக்கு 2–ம் பிரதிவாதியிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகைக்கு அசல் வழக்கு தாக்கல் செய்து சமூகம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. அதில் 2–ம் பிரதிவாதிக்கு பலமுறை கோர்ட்டும் மற்றும் பதிவஞ்சலில் அறிவிப்பு அனுப்பப்பட்டு சேர்ப்பிக்க முடியாமல் செய்தித்தாள் விளம்பரத்திற்கு உத்தரவாகி அதன்படி 2–ம் பிரதிவாதி வருகிற 21.03.2025 அன்று காலை 10.30 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டி வாய்தா போடப்பட்டுள்ளது. இல்லையேல் 2–ம் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

**M.பாரி, B.Sc.,B.L.**
**வழக்கறிஞர், நன்னிலம்.**

**மாண்புமிகு முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி**
**M.A.C.O.P.No. 99 / 2023**

C.ஆனந்தன், S/o.சின்னப்பிள்ளை,
No.52, ரெட்டகுளத்தெரு,
இடங்கண்ணி,
உடையார்பாளையம் தாலுகா.
அரியலூர் மாவட்டம்-612904.
மனுதாரர்
/எதிர்/
M.துரைச்சாமி, S/o.முருகன்,
அண்ணா நகர், வெங்கமேடு,
கரூர் மாவட்டம் -639 006.
..3-ம் எதிர்மனுதாரர்

அறிவிப்பு
மேற்படி நம்பர் வழக்கில் மனுதாரர் மோட்டார் வாகன விபத்தில் காய மடைந்தற்கு மேற்படி நீதிமன்றத்தில் இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளார். வழக்கானது மேற்படி நீதிமன்றத்தில் 3-ம் எதிர்மனுதாரர் ஆகிய தாங்கள் ஆஜராவதற்கு வருகின்ற 21.04.2025-ம் தேதியில் வாய்தா போடப்பட்டுள்ளது. தாங்கள் ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் சமூகம் கோர்ட்டில் 21.04.2025-ம் தேதி காலை10.00மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் தங்களுக்கு எதிராக மனு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
சமூகம் கோர்ட்டார் உத்திரவுப்படி
மனுதாரர்கள் வழக்கறிஞர்
**N.DURAI, B.A.,B.L.,**
**PALANI.**

**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**த.ப.எண். 519/2024**

சத்தியமூர்த்தி, த/பெ.ரெங்கசாமி,
4, மேலத்தெரு, கோவில்பத்து,
தெற்கு நாணலூர்,
முத்துப்பேட்டைTk
மனுதாரர்
–எதிர்–
1) வட்டாட்சியர், முத்துப்பேட்டை
2) சார்பதிவாளர், முத்துப்பேட்டை
எதிர்மனுதாரர்கள்

**அறிவிப்பு**
மேற்கண்ட மனுதாரர் தந்தை ரெங்கசாமி என்பவர் கடந்த 03.06.1995 ஆம் தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர்கள் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீதான விசாரணை எதிர்வரும் 17.03.2025 ஆம் தேதி அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் வாய்தா தேதி அன்று காலை 10.30 மணிக்கு நேரில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**B. தமிழரசன்** B.Sc., B.L.,
**S. மணிகண்டன்** B.A., B.L.,
வழக்கறிஞர்கள், மன்னார்குடி

**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**த.ப.எண். 524/2024**

சமீமா பானு
க/பெ.முஹம்மது மன்சூர்,
1, மஜ்ஜிதியா தெரு,
கூத்தாநல்லூர்
மனுதாரர்
–எதிர்–
நகராட்சி ஆணையர்
கூத்தாநல்லூர்
எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**
மேற்கண்ட மனுதாரரின் அக்காவின் கணவர் சாதிக் பாட்சா என்பவர் கடந்த 03.12.2019 ஆம் தேதி அன்று 1/4, மஜ்ஜிதியா தெரு, கூத்தாநல்லூர் என்ற முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர்கள் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீதான விசாரணை எதிர்வரும் 17.03.2025 ஆம் தேதி அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. இதில் யாருக் கேனும் ஆட்சேபணை இருப்பின் வாய்தா தேதி அன்று காலை 10.30 மணிக்கு நேரில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**V. ஜெயபாலன்** B.Sc., B.L.,
வழக்கறிஞர் & நோட்டரி
மன்னார்குடி

**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**த.ப.எண். 520/2024**

சண்முகம்
த/பெ.பக்கிரிசாமி
பிள்ளையார் கோவில் தெரு,
உதய மார்த்தாண்டபுரம்,
முத்துப்பேட்டை Tk
மனுதாரர்
–எதிர்–
வட்டாட்சியர்
முத்துப்பேட்டை
எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**
மேற்கண்ட மனுதாரரின் தாயார் சரஸ்வதி என்பவர் கடந்த 04.02.2017 ஆம் தேதி அன்று மேற்படி உள்ள முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர்கள் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீதான விசாரணை எதிர்வரும் 17.03.2025 ஆம் தேதி அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. இதில் யாருக் கேனும் ஆட்சேபணை இருப்பின் வாய்தா தேதி அன்று காலை 10.30 மணிக்கு நேரில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**V. ஜெயபாலன்** B.Sc., B.L.,
வழக்கறிஞர் & நோட்டரி
மன்னார்குடி

**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**த.எண். 248/2024**

ராமச்சந்திரன்
த/பெ. (லேட்) திருவேங்கடம்
உடையார்தெரு, செருமங்கலம்
மன்னார்குடி தாலுக்கா,
மனுதாரர்
–எதிர்–
1. வட்டாட்சியர், மன்னார்குடி,
2. சார்பதிவாளர், மன்னார்குடி,
எதிர்மனுதாரர்கள்

**அறிவிப்பு**
மேற்கண்ட மனுதாரரின் தந்தை திருவேங்கடம் என்பவர் கடந்த 04.11.1983 ஆம் தேதி அன்று மெயின் ரோடு, உடையார் தெரு, செருமங்கலம்,மன்னார்குடி தாலுக்கா என்ற முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர்கள் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீதான விசாரணை கடந்த 17.03.2025 ஆம் தேதி அன்று வாய்தா போடப்பட்டு, விசாரணை நடந்துள்ளது. இதில் யாருக் கேனும் ஆட்சேபணை இருப்பின் வாய்தா தேதி அன்று காலை 10.30 மணிக்கு நேரில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**S.சதீஸ்குமார்** B.A., B.L.,
வழக்கறிஞர், மன்னார்குடி

**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**த.ப.எண்.523/2024**

சாந்தி, க/பெ.வெங்கடாசலம்,
1/88–1, சேத்துமாரியம்மன்
கோவில் தெரு, உள்ளிக்கோட்டை,
மன்னார்குடி தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம். மனுதாரர்
–எதிர்–
1. வட்டாட்சியர், மன்னார்குடி,
2. சார்பதிவாளர், உள்ளிக்கோட்டை,
எதிர்மனுதாரர்கள்

**அறிவிப்பு**
மேற்கண்ட மனுதாரரின் தாயார் பரமேஸ்வரி என்பவர் கடந்த 13.02.1989 ஆம் தேதி 1/151, மெயின் ரோடு, பேட்டைத்தெரு, உள்ளிக்கோட்டை, மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம் என்ற முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர்கள் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீதான விசாரணை கடந்த 17.03.2025 ஆம் தேதி அன்று வாய்தா போடப்பட்டு, விசாரணை நடந்துள்ளது. இதில் யாருக் கேனும் ஆட்சேபணை இருப்பின் வாய்தா தேதி அன்று காலை 10.30 மணிக்கு நேரில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**N.S. நடேஷ்** B.A.,L.L.B, (Hons)
வழக்கறிஞர், மன்னார்குடி

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

## டெல்லி ஐ.பி.எல். அணியின்
# கேப்டனாக அக்சர் படேல் நியமனம்

**புதுடெல்லி, மார்ச் 15-**
ஐ.பி.எல். 18-வது சீசன் விரைவில் தொடங்க உள்ளது. இந்த சீசனில் டெல்லி கேபிடல்ஸ் அணியின் கேப்டனாக ஆல்ரவுண்டர் அக்சர் படேல் நியமிக்கப்பட்டுள்ளார். இதை அந்த அணி நிர்வாகம் நேற்று (மார்ச் 14) அறிவித்துள்ளது.

**ரூ.16.50 கோடிக்கு...**
கடந்த 2019 முதல் டெல்லி கேபிடல்ஸ் அணியில் அக்சர் படேல் விளையாடி வருகிறார். இந்த சீசனை முன்னிட்டு மெகா ஏலம் நடந்தது. இருப்பினும் அவரை விடுவிக்காமல் ரூ.16.50 கோடிக்கு டெல்லி அணி தக்கவைத்தது. கேப்டன்சியில் அவருக்கு பெரிய அளவில் அனுபவம் இல்லை. உள்ளூர் கிரிக்கெட் தொடர்களில் குஜராத் அணியை 23 போட்டிகளில் வழிநடத்தி உள்ளார். கடந்த சீசனில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிக்கு எதிரான ஒரு போட்டியில் டெல்லி கேபிடல்ஸ் அணியை வழி நடத்தி இருந்தார். அண்மையில் முடிந்த சாம்பியன்ஸ் டிராபி தொடரில் ஆல்ரவுண்டராக சிறப்பான ஆட்டத்தை அக்சர் வெளிப்படுத்தி இருந்தார்.




**மாற்றங்களுடன்....**
டெல்லி கேபிடல்ஸ் அணியின் கேப்டன் ஆனதை எண்ணி பெருமை கொள்கிறேன். ஒரு கிரிக்கெட் வீரராக நான் வளர்ந்துள்ளேன். மேலும், அணியை வெற்றிகரமாக வழிநடத்த முடியும் என நம்புகிறேன். அதற்கு நான் தயாராக உள்ளேன்" என அக்சர் படேல் தெரிவித்துள்ளார். கடந்த சீசனை ஆறாவது இடத்தில் டெல்லி அணி நிறைவு செய்தது. கேப்டன், பயிற்சியாளர் என நிறைய மாற்றங்களுடன் அந்த அணி இந்த முறை களம் காண்கிறது. வரும் 24-ம் தேதி விசாகப்பட்டினத்தில் நடைபெறும் போட்டியில் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணியை டெல்லி எதிர்கொள்கிறது.

**123 விக்கெட்டுகள்...**
31 வயதான அக்சர் படேல், 150 ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடி உள்ளார். 1653 ரன்கள் மற்றும் 123 விக்கெட்டுகளை கைப்பற்றி உள்ளார். பஞ்சாப் கிங்ஸ் (68 போட்டிகள்) மற்றும் டெல்லி கேபிடல்ஸ் (82 போட்டிகள்) அணிகளுக்காக அவர் ஐ.பி.எல். விளையாடி உள்ளார்.

# ஐ.பி.எல்: பும்ரா பங்கேற்காததால் மும்பை அணிக்கு புதிய சிக்கல்..?

**மும்பை, மார்ச் 15-**
இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளரும், மும்பை இந்தியன்ஸ் அணியின் முன்னணி வீரருமான ஜஸ்பிரீத் பும்ரா ஐ.பி.எல். லில் ஆரம்ப சுற்றுப் போட்டிகளில் பங்கேற்க மாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முதுகுவலி...**
பார்டர் - கவாஸ்கர் தொடரின் கடைசிப் போட்டியில் பும்ரா, முதுகுவலியால் அவதியடைந்தார். இதனால், போட்டியிலிருந்து விலகிய அவர், சாம்பியன்ஸ் டிராபி தொடரிலும் பங்கேற்கவில்லை. இது இந்திய அணிக்குப் பின்னடைவாகக் கருதப்பட்டாலும், மற்றவீரர்களின் பங்களிப்பால் இந்திய அணி மூன்றாவது முறையாக சாம்பியன்ஸ் டிராபி கோப்பையை வென்று அசத்தியது.

**ஐ.பி.எல். தொடர்...**
இந்த நிலையில், 18-வது ஐ.பி.எல். தொடர் வருகிற 22 ஆம் தேதி கொல்கத்தாவின்




ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற விருக்கிறது. அணி வீரர்களும் அவர்களது அணியில் இணைந்து வருகின்றனர். மார்ச் 23 ஆம் தேதி நடைபெறும் ஆட்டத்தில் மும்பை அணி தனது முதல் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸை எதிர்கொள்ளவிருக்கிறது.

**ஓய்வு தேவை...**
பும்ரா வலைப்பயிற்சியில் ஈடுபட்டு வந்தாலும், அவருக்கு ஓய்வு தேவையான ஒன்றாக இருக்கிறது என்று பி.சி.சி.ஐ. யின் பிசியோதெரபி நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். ஐ.பி.எல். லைத் தொடர்ந்து பும்ரா, இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியிலும் விளையாடவிருக்கிறார்.

**இழப்பு...**
இந்த நிலையில், 2024 ஆம் ஆண்டு ஐ.பி.எல். லில் 10-வது இடத்தைப் பிடித்த மும்பை அணிக்கு, முன்னணி வேகப்பந்து வீச்சாளர் பும்ரா இல்லாதது பெரும் இழப்பாகக் கருதப்படுகிறது. இருப்பினும், அவரைத் தவிர்த்து கேப்டன் ஹார்திக் பாண்டியா, டிரெண்ட் போல்ட், கார்பின் போஸ்ச், தீபக் சாஹர் ஆகியோர் அணியில் உள்ளனர். ஏப்ரல் 4 ஆம் தேதி லக்னௌவையும், ஏப்ரல் 7 ஆம் தேதி பெங்களூருவையும் மும்பை அணி எதிர்கொள்ளவிருக்கிறது. இந்தப் போட்டியில் பும்ரா விளையாடுவாரா என்பது இன்னும் உறுதிசெய்யப்படாத நிலையில், அவர் ஏப்ரல் முதல் வாரத்தில் அணியில் இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மாஸ்டர்ஸ் லீக் கிரிக்கெட்:
# ஆஸி.யை வீழ்த்தி இந்திய அணி இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்

**மும்பை, மார்ச் 15-**
இன்டர்நேஷனல் மாஸ்டர்ஸ் லீக்கில் அரையிறுதியில் இந்திய அணி ஆஸியை வீழ்த்தியது.

**இந்திய அணி வெற்றி...**
இந்தப் போட்டியில் முதலில் பேட்டிங் செய்த இந்திய மாஸ்டர்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 220/7 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக யுவராஜ் சிங் 30 பந்துகளில் 59 ரன்கள் எடுத்தார். அடுத்து விளையாடிய ஆஸ்திரேலிய மாஸ்டர்ஸ் அணி 18.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளை




யும் இழந்து 126 ரன்கள் மட்டுமே எடுத்தது. 94 ரன்கள் வித்தியாசத்தில் வென்ற இந்திய மாஸ்டர்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. இந்தப் போட்டியில் இந்திய மாஸ்டர்ஸ் அணி சார்பில் 4 விக்கெட்டுகள் எடுத்த ஷபாஸ் நதீம் ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

**இலங்கை - மே.இ.தீவுகள்...**
மற்றுமொரு அரையிறுதியில் இலங்கை மாஸ்டர்ஸ் அணி, மே.இ.தீ. மாஸ்டர்ஸ் அணியுடன் மோதுகிறது. இதில் வெற்றி பெறுவர்களுடன் இந்திய மாஸ்டர்ஸ் அணி இறுதிப் போட்டியில் மார்ச்.16ஆம் தேதி விளையாடவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மகளிர் டி-20 கிரிக்கெட் தொடர்:
# வெற்றியுடன் தொடங்கிய இலங்கை

**கிறிஸ்ட்சர்ச், மார்ச் 15-**
நியூசிலாந்தை வீழ்த்தி மகளிர் டி20 கிரிக்கெட் தொடரை வெற்றியுடன் இலங்கை தொடங்கியது.

**இலங்கை மகளிர் அணி....**
நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி அந்நாட்டு மகளிர் அணிக்கெதிராக தலா 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் மற்றும் டி20 தொடர்களில் விளையாட வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரை நியூசிலாந்து 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியிருந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையே தற்போது டி20 தொடர் நடைபெற்று வருகிறது.

**முதல் டி20 போட்டி...**
அதன்படி இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதல் டி20 போட்டி நேற்று நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற முதலில் பேட்டிங் செய்த நியூசிலாந்து 18.5 ஓவர்களில் 101 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக எம்மா மெக்லியோட் 44 ரன்கள் அடித்தார். இலங்கை தரப்பில் மல்கி மதாரா 3 விக்கெட்டுகளும், பிரியதர்ஷினி மற்றும் கவிஷா தில்ஹாரி தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

**இலங்கை வெற்றி...**
இதனையடுத்து 102 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணி 14.1 ஓவரில் 3 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 102 ரன்கள் அடித்து வெற்றி பெற்றது. அதிகபட்சமாக சமாரி அத்தபட்டு 64 ரன்கள் அடித்தார். நியூசிலாந்து தரப்பில் ஜெஸ் கெர் 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரை இலங்கை வெற்றியுடன் தொடங்கியுள்ளது.

கண் தானம் செய்வீர்

## கல்வித்துறைக்கு அதிக முக்கியத்துவம்:
# பள்ளிக்கல்வித் துறைக்கு ரூ.46,767 கோடி ஒதுக்கீடு

**சென்னை, மார்ச் 15-**
தமிழக பட்ஜெட்டில் பள்ளிக் கல்வித் துறைக்கு மட்டும் ரூ.46,767 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
தமிழக அரசு, பள்ளிக் கல்வித் துறைக்கும், உயர் கல்விக்கும் அதிக நிதி ஒதுக்கீடு செய்து மாநிலத்தின் வருங்கால தலைமுறையினர் நல்ல கல்வித் தகுதியோடு வெளிவருவதை உறுதி செய்யும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்திருக்கிறது. அந்த வகையில், இந்த வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பள்ளிக் கல்வித் துறைக்கு மட்டும் ரூ.46,767 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கல்வித்துறைக்கான சில அறிவிப்புகள்:**
சென்னை, கோவை, மதுரையில் தலா 1,000 மாணவிகள் பயன்பெறும் வகையில் ரூ.275 கோடியில் மாணவியர் விடுதிகள்!
ரூ.3,796 கோடியை மத்திய அரசு விடுவிக்காமல் நிலுவையில் வைத்துள்ளது. இந்த சூழ்நிலையிலும், அரசு பள்ளி ஆசிரியர்களின் ஊதியம் உள்ளிட்ட செலவினங்களுக்கு தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது.
அரசுப் பள்ளிகளில் உள்கட்டமைப்புகளை மேற்கொள்ள ரூ.1,000 கோடி ஒதுக்கீடு.
ரூ.50 கோடியில் 500 அரசுப் பள்ளிகளில் உயர்கல்வி குறித்து விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்படும்.
மேலும் சுமார் 3 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம். அதற்காக ரூ.600 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.
ரூ.65 கோடியில், 2,676 பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் தரம் உயர்வு!
ரூ.56 கோடியில், 880 உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் தரம் உயர்வு!
ரூ.160 கோடியில் 2,000 பள்ளிகளில் கணினி ஆய்வகங்கள் தரம் உயர்வு!
காலை உணவுத் திட்டம் நகர்ப்புற அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்படும்.
நகர்ப் பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாடு திட்டத்துக்கு ரூ.2,000 கோடி!
அரசுப் பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி ரூ.700 கோடியாக உயர்த்தப்படும்.
அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் மேலும் 15,000 இடங்கள் அமைக்கப்படும்.
வளர்ந்து வரும் துறைகளில் புதிய பட்டப்படிப்புகள் உருவாக்கப்படும்.
போட்டித் தேர்வு எழுதும் மாணவர்களுக்காக மாநகராட்சிகளில் 1 லட்சம் புத்தகங்களுடன் சிறப்பு நூலகங்கள்.
ஏ.ஐ. உள்ளிட்ட துறைகளில் புதிய பட்டய மற்றும் பட்டப்படிப்புகள் உருவாக்கப்படும்.
அரச பொறியியல் கல்லூரிகளில் ஏ.ஐ. உள்ளிட்ட நவீன தகவல் தொழில்நுட்பப் படிப்புகள் அறிமுகப்படுத்தப்படும்.
பள்ளிப் பாடத் திட்டத்தில் சதுரங்கம் விளையாட்டு சேர்க்கப்படும்.
குடிமைப் பணி முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற இளைஞர்களுக்கு ரூ.50,000 ஊக்கத் தொகை.
முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்துக்கு ரூ.600 கோடி நிதி ஒதுக்கீடு!
அரசு உதவிபெறும் பள்ளிகள் 1ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை மேலும் 3.14 இலட்சம் மாணவர்கள் பயன் பெறுவார்கள்.
ரூ.152 கோடியில் 10 புதிய அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்கள்! அமைக்கப்படும். இதன் மூலம் 1,308 மாணவர்கள் பயன்!
கல்லூரி மாணவர்களுக்கு அவரவர் விரும்பும் வகையில் கைக்கணினி அல்லது மடிக்கணினி வழங்கப்படும்.
ரூ.10 லட்சம் வரை பெண்கள் பெயரில் பதிவு செய்யப்படும் அசையா சொத்துகளுக்கு பதிவு கட்டணம் 1 சதவீதம் குறைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரிஷப் பந்த்துக்கு புகழாரம்




இந்த ஆண்டு ஐ.பி.எல். தொடர் இன்னும் ஒரு வாரத்தில் தொடங்கவுள்ளது. ஐ.பி.எல். தொடரில் மார்ச் 22 ஆம் தேதி தொடங்கும் முதல் போட்டியில் நடப்பு சாம்பியனான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியை எதிர்த்து விளையாடுகிறது. விரைவில் ஐ.பி.எல். தொடர் தொடங்கவுள்ள நிலையில், அனைத்து அணிகளும் தங்களது பயிற்சியை தீவிரப்படுத்தியுள்ளன. கடந்த சீசன் வரை தில்லி கேபிடல்ஸ் அணியின் கேப்டனாக செயல்பட்டு வந்த ரிஷப் பந்த், ஐ.பி.எல். மெகா ஏலத்தில் லக்னௌ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணியால் வாங்கப்பட்டு அந்த அணியின் கேப்டனாக நியமிக்கப்பட்டார்.
விரைவில் ஐ.பி.எல். தொடங்கவுள்ள நிலையில், ரிஷப் பந்த் மிகவும் தனித்துவமான விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேன் என மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் விக்கெட் கீப்பர் தினேஷ் ராம்தின் தெரிவித்துள்ளது முக்கியத்துவம் பெறுகிறது. இது தொடர்பாக அவர் பேசியதாவது: ரிஷப் பந்த் மிகவும் தனித்துவமான வீரர். அவர் பேட்டிங் செய்து ரன்கள் சேர்க்கும் மிகவும் தனித்துவமாக இருக்கும். ஆஸ்திரேலிய அணி வீரர் ஜோஷ் இங்கிலிஷும் சிறந்த வீரர். அவர் சாம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடரில் சிறப்பாக விளையாடினார். தற்போது பல இளம் விக்கெட் கீப்பர்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர் என்றார். மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் வீரரான தினேஷ் ராம்தின் சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் கிரிக்கெட் தொடரில் விளையாடி வருவது குறிப்பிடத்தக்கது.

# அரையிறுதிக்கு சபலென்கா தகுதி

முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இண்டியன்வெல்ஸ் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவின் கலிபோர்னியாவில் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் நம்பர் 1 வீராங்கனையான அரினா சபலென்கா (பெலாரஸ்), சம்சோனோவா (ரஷியா) உடன் மோதினார். இதில் தொடக்கம் முதலே சிறப்பாக விளையாடிய சபலென்கா 6-2 மற்றும் 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். இவர் அரையிறுதியில் மேடிசன் கீஸ் உடன் பலப்பரீட்சை நடத்த உள்ளார்.

# இன்சமாம் உல்ஹக் வலியுறுத்தல்

வரும் 22-ம் தேதி 18-வது ஐ.பி.எல். சீசன் தொடங்க உள்ளது. 10 அணிகள் பங்கேற்று விளையாடும் இந்த தொடர் உலக அளவில் நடைபெறும் விளையாட்டு தொடர்களில் முக்கியமானதாக அமைந்துள்ளது. உள்நாடு மற்றும் வெளிநாடு என உலக கிரிக்கெட் வீரர்கள் சங்கமிக்கும் களமாக ஐ.பி.எல். உள்ளது. இந்த நிலையில் இன்சமாம் அது குறித்து பேசியுள்ளார்.
"உலக கிரிக்கெட்டின் சிறந்த வீரர்கள் அனைவரும் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் பங்கேற்று விளையாடுகின்றனர். ஆனால், மற்ற நாடுகளில் நடைபெறும் லீக் கிரிக்கெட் போட்டிகளில் இந்திய வீரர்கள் பங்கேற்பது இல்லை. அதனால் அனைத்து கிரிக்கெட் வாரியங்களும் தங்கள் நாட்டு வீரர்கள் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் பங்கேற்பதை தடுக்க வேண்டும். மற்ற நாடுகளில் நடைபெறும் கிரிக்கெட் லீக்கில் பங்கேற்க இந்திய வீரர்களுக்கு அனுமதி இல்லாத போது அதையே தான் மற்ற நாட்டு வாரியங்களும் செய்ய வேண்டும்." என இன்சமாம் கூறியுள்ளார்.

# புதிய கல்விக்கொள்கையை ஏற்காததால் தமிழகத்துக்கு மத்திய அரசு வஞ்சனை
## அமைச்சர் தங்கம் தென்னரசு விமர்சனம்

**சென்னை, மார்ச் 15-**
மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கையினை தமிழகம் ஏற்றுக்கொள்ளாததால், 2,152 கோடி ரூபாயை மத்திய அரசு தமிழகத்துக்கு விடுவிக்காமல் வஞ்சித்துள்ளது" என்று அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்.
2025-26-ம் நிதி ஆண்டுக்கான தமிழக பொது பட்ஜெட்டை, சட்டப்பேரவையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று (மார்ச் 14) காலை சரியாக 9.30 மணியளவில் தாக்கல் செய்தார். பள்ளிக்கல்வித் துறை தொடர்பான அறிவிப்புகளின் போது அவர் பேசுகையில், "பள்ளிக்கல்வித் திட்டத்தில் சமக்ர சிக் ஷா சார்பில் பல்வேறு மாணவர்கள் நலன் சார்ந்த திட்டங்களை, கடந்த 7 ஆண்டுகளாக மாநில அரசு சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது.
எனினும், இந்தாண்டு மும்மொழிக் கொள்கையை உள்ளடக்கிய மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கையினை தமிழகம் ஏற்றுக் கொள்ளாததால், ஏற்கெனவே ஒப்புதல் வழங்கிய நிலையிலும் 2,152 கோடி ரூபாயை மத்திய அரசு தமிழகத்துக்கு விடுவிக்காமல் வஞ்சித்துள்ளது. ஆசிரியர்களின் ஊதியம் உள்ளிட்ட அத்திட்டங்களுக்கு உரிய நிதியை மாநில அரசே தனது சொந்த நிதி ஆதாரத்திலிருந்து விடுவித்துள்ளது.
பழங்குடியின மாணவர்களின் இடைநிற்றலை நீக்கும் நோக்கத்தோடு, மாணவர்கள் அவர்களுடைய இருப்பிடத்துக்கு அருகிலேயே உயர் கல்வியைத் தொடர்ந்து பயின்றிட அரசு தொடர் முயற்சிகளை எடுத்து வருகிறது. அந்தவகையில் தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிபட்டி, ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் மற்றும் தாளவாடி, கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் மற்றும் கல்வராயன் மலை, கிருஷ்ணகிரி மாவட்டம் தளி, நீலகிரி மாவட்டம் கோத்தகிரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை உள்ளிட்ட இடங்களில் உள்ள தொலைதூர மலைப் பகுதிகளில் அமைந்துள்ள 14 உயர் நிலைப்பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும்.
மதுரையில் உருவாக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகத்துக்கு இதுவரை 15 லட்சத்துக்கும் மேற்பட்ட வாசகர்கள் வருகை புரிந்துள்ளனர். அதைத்தொடர்ந்து கோவை மற்றும் திருச்சியில் மாபெரும் நூலகங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அறிவைப் பரவலாக்கிடும் முயற்சிகளின் அடுத்தகட்டமாக சேலம், கடலூர் மற்றும் திருநெல்வேலியில் பொதுமக்கள் மற்றும் போட்டித் தேர்வு எழுதிடும் மாணவர்கள் பயன்பெறும் விதமாக தலா 1 லட்சம் புத்தகங்கள் மற்றும் மாநாட்டுக்கூட வசதிகள் உடன் நூலகங்கள் அமைக்கப்படும், என்று அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்தார்.

# சென்னையில் ஏழு மழைநீர் உறிஞ்சும் பல்லுயிர் பூங்காக்கள் அமைக்கப்படும்
## தமிழக பட்ஜெட்டில் புதிய அறிவிப்பு

**சென்னை, மார்ச் 15-**
பருவநிலை மாற்றத்திலிருந்து மீட்கும் தன்மையுடைய ஏழு மழைநீர் உறிஞ்சும் பல்லுயிர்ப் பூங்காக்கள் சென்னையில் ரூ. 88 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும், என்று நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.
2025-26-ம் நிதி ஆண்டுக்கான தமிழக பொது பட்ஜெட்டை, சட்டப்பேரவையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று (மார்ச் 14) காலை சரியாக 9.30 மணியளவில் தாக்கல் செய்தார். நகராட்சி நிருவாகத்துறையின் கீழ் அவர் வெளியிட்ட அறிவிப்பில், "தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த 4 ஆண்டுகளில் 4,132 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ள பணிகளுக்காக, வரும் நிதியாண்டில் 2,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
சென்னையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக வேளச்சேரி பிரதான சாலையிலிருந்து குருநானக் கல்லூரி சந்திப்பு வரை 3 கி.மீ. நீளத்துக்கு ஒரு மேம்பாலம் 310 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், அதேபோன்று ரயில்வே துறையுடன் இணைந்து கொருக்குப் பேட்டை ரயில்வே மேம்பாலம், சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட அப்பகுதி மக்கள் பயன்பெறும் வகையில், 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் அமைக்கப்படும்.
கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் உயிரி எரிவாயு நிலையம், இயற்கை உரம் தயாரிக்கும் நிலையம், தானியங்கி பொருள் மீட்பு மையம் மற்றும் 21 மெகாவாட் திறன் கொண்ட திடக் கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் பணி 3,450 கோடி ரூபாய் திட்டக் காலத்துக்கான மதிப்பீட்டில் தொடங்கப்படும்.
அடையாறு நதியை மீட்டெடுத்து அழகுறச் சீரமைக்கும் திட்டத்தின் முதற்கட்டமாக, சைதாப்பேட்டை முதல் திரு.வி.க.பாலம் வரையிலான பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு 15 மாதங்களுக்குள் இப்பணிகள் முடிக்கப்படும். பருவநிலை மாற்றத்திலிருந்து மீட்கும் தன்மையுடைய ஏழு மழைநீர் உறிஞ்சும் பல்லுயிர்ப் பூங்காக்கள் சென்னை பெருநகரப் பகுதியில் 88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.
சென்னையில் முதன்மைச் சுற்றுக் குழாய் திட்டம் எனும் புதிய திட்டத்தின் மூலம் அனைத்து குடிநீர் விநியோக நிலையங்களுக்கும் சமமான அளவில் குடிநீர் வழங்கப்படுவது உறுதி செய்திடும் இத்திட்டம் 2,423 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடுத்த 3 ஆண்டு காலத்திற்குள் நிறைவேற்றப்படும்" என்று நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

## எந்த ஒரு தேசியச் சின்னத்தையும்
# அவமானப்படுத்தும் நோக்கம் இல்லை: அமைச்சர் விளக்கம்

**சென்னை, மார்ச் 15-**
எந்த ஒரு தேசியச் சின்னத்தையும் அவமானப்படுத்தும் நோக்கம் இல்லை என்று அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.
தமிழக சட்டசபையின் இந்த ஆண்டின் முதல் கூட்டம் கடந்த ஜனவரி மாதம் 6-ந் தேதி கவர்னர் உரையுடன் தொடங்கியது. தொடர்ந்து 11-ந் தேதி வரை கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதமும், முதல்வர் மு.க.ஸ்டாலினின் பதில் உரையும் இடம்பெற்றது. அத்துடன் தேதி குறிப்பிடாமல் சட்டசபை கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.
இந்த நிலையில், 2025-26-ம் நிதி ஆண்டுக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்வதற்காக தமிழக சட்டசபை நேற்று மீண்டும் கூடியது..
இந்நிலையில், அமைச்சர் தங்கம் தென்னரசு மெரினாவில் உள்ள பேரறிஞர் அண்ணா, கலைஞர் நினைவிடங்களில் மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியதாவது:-
இந்த பட்ஜெட் முழுக்க முழுக்க தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலோடு சிறப்பாக உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த பட்ஜெட் எதை நோக்கி வடிவமைக்கப்பட்டிருக்கிறது, இந்த பட்ஜெட்டின் பெரு நோக்கம் என்ன என்பதை முதல்வர் அழகாக கோடிட்டு காட்டியிருக்கிறார். அவருடைய தலைமையிலான திராவிட மாடல் அரசு 'எல்லோர்க்கும் எல்லாம்' என்கிற தத்துவத்தை நோக்கி இயங்கி வரக்கூடிய அரசு என்பதை நாம் அனைவரும் மிக நன்றாக அறிவோம். எனவே அந்த தத்துவத்துக்கு செயல்வடிவம் கொடுக்கக்கூடிய வகையில், தமிழ்நாட்டு மக்களுடைய வளர்ச்சிக்கு மேன்மேலும் வித்திடக் கூடிய வகையில் இந்த நிதி நிலை அறிக்கை அமையும். இவ்வாறு அவர் கூறினார்.
மேலும் பட்ஜெட் இலச்சினையில் ₹-க்குப் பதிலாக 'ரூ' இடம்பெற்றது குறித்த கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், "எங்களைப் பொறுத்தமட்டில், எந்த ஒரு தேசிய சின்னத்தையும் அவமானப்படுத்துவதோ அல்லது அவற்றை குறைத்து மதிப்பிடுவதோ நோக்கம் இல்லை. இந்திய ஒருமைப் பாட்டிலும், இறையாண்மையிலும், இந்திய திருநாட்டின் வளர்ச்சியிலும் நாங்கள் பெருமதிப்பு கொண்டிருக்கக் கூடியவர்கள்" என்று கூறினார்.

# அமலாக்கத்துறை சோதனையை சட்ட ரீதியாக எதிர்கொள்வோம்
## அமைச்சர் செந்தில் பாலாஜி தகவல்

**சென்னை, மார்ச் 15-**
அமலாக்கத்துறை சோதனையை சட்ட ரீதியாக எதிர்கொள்வோம் என்று செந்தில் பாலாஜி கூறினார்.
அமைச்சர் செந்தில் பாலாஜி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: டாஸ்மாக் கொள்முதலில் எந்த சலுகையும் யாருக்கும் காட்டப்படவில்லை. அ.தி.மு.க. ஆட்சியில் டாஸ்மாக் டெண்டரில் என்ன நடைமுறை பின்பற்றப்பட்டதோ அதனை மெருகேற்றி முறையாக டெண்டர்கள் வழங்கப்படுகிறது. எடப்பாடி பழனிசாமி ஒருமுறை ஆயிரம் கோடி என்கிறார். இன்னொரு முறை 40 ஆயிரம் கோடி என்கிறார்.
தமிழக அரசின் செயல்பாடுகளை பொறுத்துக்கொள்ள முடியாமல் மத்திய அரசு அமலாக்கத்துறையை ஏவியுள்ளது. டாஸ்மாக்கில் ரூ.1,000 கோடி ஊழல் குற்றச்சாட்டை எந்த ஆவணத்தின் அடிப்படையில் முன்வைக்கிறார்கள். அமலாக்கத்துறை எடுத்துள்ள சோதனையை சட்ட ரீதியாக டாஸ்மாக் நிர்வாகம் எதிர்கொள்ளும்" இவ்வாறு கூறினார்.
முன்னதாக சென்னையில் உள்ள தமிழக அரசின் டாஸ்மாக் தலைமை அலுவலகம், குடோன் மற்றும் பல்வேறு மதுபான தொழிற்சாலைகளின் அலுவலகங்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கடந்த 6-ந்தேதி அமலாக்கத்துறை சோதனை நடத்தியது. இந்த சோதனை குறித்து அமலாக்கத் துறை ஒரு செய்திக்குறிப்பு வெளியிட்டது. அதில், தமிழ்நாடு அரசின் டாஸ்மாக் நிறுவனத்தில் ரூ.1,000 கோடி ஊழல் நடந்துள்ளது என்று அமலாக்கத்துறை குற்றஞ்சாட்டி இருந்தது.

# கச்சத்தீவு திருவிழாவிற்கு இந்திய பக்தர்கள் பயணம்



**ராமேசுவரம், மார்ச் 15-**

கச்சத்தீவில் அமைந்துள்ள புனித அந்தோணியார் ஆலய திருவிழாவிற்கு இந்திய பக்தர்கள் ராமேஸ்வரத்திலிருந்து விசைப் படகு, நாட்டு படகு மூலம் 3140 பேர் நேற்று முன்தினம் காலையில் புறப்பட்டு சென்றனர்.

ராமேஸ்வரம் துறைமுக கடலோரப் பகுதியில் இருந்து 22 மைல்கள் நாட்டில் இந்திய இலங்கை சர்வதேச கடலோர பகுதிகள் அருகாமையில் கச்சத்தீவு அமைந்துள்ளது. இந்த கச்சத்தீவில் அமைந்துள்ள புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆண்டுதோறும் பிப்ரவரி, மார்ச் மாதத்தில் இரண்டு நாட்கள் திருவிழா நடைபெறும். இந்த திருவிழாவில் இந்திய பக்தர்கள் இலங்கை பக்தர்கள் இரண்டு பக்தர்களும் கலந்து கொண்டு சேர்ந்து கூட்டுப் பிரார்த்தனை மற்றும் தேர் பவனி மற்றும் சிறப்பு பூஜைகளில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்வார்கள். இதனைத் தொடர்ந்து இந்த ஆண்டுக்கான திருவிழா மார்ச் 14 மற்றும் 15 ஆகிய தேதிகளில் நடைபெறுவதாக ஒரு மாதம் காலத்திற்கு முன்பு இலங்கை யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர்கள் தெரிவித்தனர். அதன் பேரில் ராமேஸ்வரம் வேர்க்காடு புனித அந்தோணியார் ஆலயத்தில் நிர்வாகிகள் கச்சத்தீவு திருவிழாவிற்கு தமிழ் நாடு உள்பட பல மாநிலங்களிலிருந்து வரும் இந்திய பக்தர்களை அழைத்துச் செல்வதற்கு தீவிர நடவடிக்கை எடுத்து வந்தனர். அதன் பேரில் நேற்றுமுன்தினம் காலையில் ராமேஸ்வரம் துறைமுக பகுதியில் இருந்து 78 விசைப்படகு மற்றும் 18 நாட்டு படகில் 2478 ஆண்கள் 587 பெண்கள் 75 ஆண் மற்றும் பெண் குழந்தைகள் என 3140 பக்தர்கள் சுங்கத்துறை காவல் துறை வருவாய்த்துறை மற்றும் கடற்படை அதிகாரிகளின் ஆவணங்கள் மட்டும் உடைமைகளை பரிசோதனை செய்து பின்னர் படகில் புறப்பட்டு சென்றனர். காலையில் முன்னதாக ராமேஸ்வரம் துறைமுகம் பகுதியிலிருந்து புறப்பட்டு முதல் படகில் சென்ற பக்தர்களை ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சிம்ரன் ஜீத்சிங் காலோன் கொடிய அசைத்து வைத்து வாழ்த்து தெரிவித்து பக்தர்களை வழி அனுப்பி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் ராமநாதபுரம் மாவட்ட கண்காணிப்பாளர் சந்தீஷ்,

இந்திய கடலோர காவல் படை அதிகாரி வினாய்குமார், துணை ஆணையர் (சுங்கம்) பிரகாஷ், இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் இராஜமனோகரன், மீன்வளத்துறை துணை இயக்குநர்கள் பிரபாவதி, கோபிநாத், உதவி இயக்குநர்கள் ஜெயக்குமார், சிவக்குமார், இராமேஸ்வரம் நகராட்சி ஆணையர் கண்ணன், இராமேஸ்வரம் நகராட்சி பொறியாளர் பாண்டீஸ்வரி, வட்டாட்சியர் அப்துல்ஜபார் மற்றும் விழாக்குழுவினர் பலர் உடனிருந்தனர்.

கச்சத் தீவில் நேற்றுமுன்தினம் மாலை 4 மணி அளவில் திருவிழா துவங்குவதற்கான இருநாட்டு பக்தர்கள் மத்தியில் யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர்கள் புனித அந்தோனியார் ஆலயத்தின் முன்பு அமைக்கப்பட்டு இருந்த 100 அடி மரக் கம்பத்தில் கொடியேற்றி வைத்து திருவிழாவை முறைப்படி துவக்கி வைத்தனர்.அதன் பின்னர் திருப்பலி பூஜைகள் மற்றும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. தொடர்ந்து இரவு புனித அந்தோனியார் தேரில் ஆலயத்தை சுற்றி வலம் வந்து பக்தர்களுக்கு காட்சியளித்து தேர் பவனி நடைபெற்றது. அதன் பின்னர் நேற்று காலையில் ஆலயத்தில் சிறப்பு பிரார்த்தனை கூட்டம் நடைபெற்ற பின்னர் தொடர்ந்து திருவிழா நிறைவுக்காக கொடிக் கம்பத்திலிருந்து கொடி இறக்கப்பட்டு திருவிழா நிறைவு பெறும். இதனை தொடர்ந்து திருவிழாவில் கலந்து கொண்ட இருநாட்டு பக்தர்கள் ஒவ்வொருவரும் அந்தந்த உறவுகளை பரிமாற்றம் செய்து கொள்வார்கள்.அதன் பின்னர் இருநாட்டு பக்தர்களும் கச்சத்தீவிலிருந்து புறப்பட்டு அந்தந்த நாடுகளுக்கு திரும்பி சென்று விடுவார்கள்.

# சுதந்திர போராட்ட வீரர்கள் குறைதீர்க்கும் கூட்டம்: கலெக்டர் ஜெயசீலன் தகவல்

**விருதுநகர், மார்ச் 15-**

விருதுநகர் மாவட்டத்தில் சுதந்திர போராட்ட வீரர்கள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் வருகிற 19-ம்.தேதி மாலை 4.30 மணி அளவில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் விருதுநகர் மாவட்ட மத்திய மாநில சுதந்திர போராட்ட தியாகிகளின் வாரிசுகள் அனைவரும் கலந்து கொண்டு ஓய்வூதிய பலன்கள் குறித்து தங்கள் குறைகளையும், ஆலோசனைகளையும் நேரில் தெரிவிக்கலாம் என மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

# நத்தம் மாரியம்மன் கோவிலில் பூக்குழி கண் திறப்பு



**நத்தம், மார்ச் 15-**

தென் தமிழகத்தில் பிரசித்தி பெற்ற கோவில்களில் ஒன்றானது நத்தம் மாரியம்மன் கோவில். இந்த கோவிலில் இந்த வருட மாசிப்பெருந்திருவிழா கடந்த 3-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடந்து வருகிறது. விழாவில் தினமும் அம்மனுக்கு சிறப்பு அலங்காரம், பூஜைகள், தீபாராதனைகள் நடந்து வருகிறது. இதில் நேற்று காலை பூக்குழி பல்வேறு வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு விசேஷ பூஜைகள் நடந்தது.தொடர்ந்து கோவிந்தா கோஷம் முழங்க கோவில் முன்பாக பூக்குழி கண்திறக்கும் நிகழ்ச்சி நடந்தது. தொடர்ந்து மாரியம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு அபிஷேகங்களும் தீபாராதனைகளும் நடந்தது. இதில் சுற்றுவட்டாரங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

# விஜய கரிசகுளத்தில் 3-வது அகழாய்வு பணிகள் தொடக்கம்

**விருதுநகர், மார்ச் 15-**

வெம்பக்கோட்டை அருகே உள்ள விஜய கரிசல்குளத்தில் மூன்றாம் கட்ட அகழாய்வு பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. அதில் ஏராளமான செப்பு காசுகள், ஆபரணங்கள், கண்ணாடி மணிகள், மண் குவளைகள், சில்லுவட்டுகள் ,தீப விளக்குகள், சங்கு வளையல்கள், சுடுமண்ணால் செய்யப்பட்ட உருவ பொம்மைகள்,உள்பட 3,400-க்கும் மேற்பட்ட பொருட்கள் கிடைத்துள்ளன. கிடைத்த பொருட்களை ஆவணப்படுத்தும் பணியும் துரிதமாக நடைபெற்று வருகிறது.இதுவரை கிடைத்த பொருட்களையும், முதலாம், இரண்டாம் கட்ட அகழாய்வில் கிடைத்த பொருட்களையும் அகழாய்வுத் தளம் அருகிலேயே அமைக்கப்பட்ட கண்காட்சி அரங்கில் வைக்கப்பட்டது . இந்த கண்காட்சி அரங்கு நேற்று திறந்து வைக்கப்பட்டது.இதனை பார்வையிட கட்டணம் இல்லை. பார்வையாளர்கள் எளிதாக பார்க்கும் வகையில் தனித்தனியாக வைக்கப்பட்டது.

நேற்று தைப்பூச அரசு விடுமுறை என்பதால் கண்காட்சி அரங்கினை முதல் நாளிலே ஏராளமான பார்வையாளர்கள் பார்வையிட்டனர். அரங்கில் வைக்கப்பட்ட பொருள்கள் குறித்து பார்வையாளர்களுக்கு அகழாய்வு இயக்குனர் பொன் பாஸ்கர் விளக்கம் அளித்தார்.மேலும் தற்போது குறைவான பொருட்களே கண்காட்சி அரங்கில் வைக்கப்பட்டுள்ளன. கூடுதலாக பொருட்களை கண்காட்சி அரங்கில் வைக்கும் பணியும், பாதுகாப்பிற்காக சி.சி.டி.வி. கேமரா பொருத்தம் பணியும் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

# தொலை நோக்குடன் கூடிய வளர்ச்சிக்கான பட்ஜெட்

## மாணிக்கம் தாகூர் எம்.பி பாராட்டு



**திருமங்கலம், மார்ச் 15-**

தமிழக அரசு தாக்கல் செய்துள்ள பட்ஜெட் தொலைநோக்குடன் கூடிய தமிழகத்தின் வளர்ச்சிக்கான பட்ஜெட் என விருதுநகர் எம்.பி, மாணிக்கம் தாகூர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

நகர்ப்புற ஏழை குடும்பங்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திடும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகேயுள்ள உச்சப்பட்டியில் ரூ.60.48 கோடி திட்ட மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய 672 குடியிருப்புகள் கொண்ட பிரமாண்ட அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. திருமங்கலம் மற்றும் உச்சப்பட்டி கிராமத்திற்கு இடையில் அனைத்து வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ள இந்த அடுக்குமாடி குடியிருப்பு தற்போது பொது மக்கள் பயன்பாட்டிற்கு தயாராக உள்ளது. இதனை விருதுநகர் எம்.பி ப.மாணிக்கம்தாகூர் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த விருதுநகர் எம்.பி ப.மாணிக்கம் தாகூர் கூறுகையில்: தமிழக நிதியமைச்சர் தாக்கல் செய்துள்ள பட்ஜெட் தொலை நோக்கு பார்வையுடன் கூடிய தமிழகத்தின் வளர்ச்சிக்கான பட்ஜெட் ஆகும். இதில் தமிழகத்திலுள்ள ஒவ்வொரு பகுதியின் வளர்ச்சிக்காக அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.குறிப்பாக மதுரை பகுதியின் வளர்ச்சிக்கு 300கோடி ஒதுக்கீடு செய்துள்ளது பாராட்டுக்குரியது.அண்ணாமலையும் அமலாக்கத்துறையும் ஒரே பார்வையாக இருப்பவர்கள். அண்ணாமலை என்ன சொல்கிறாரோ அதையே அமலாக்கத்துறையும் சொல்லும்.பாஜக ஆளும் மாநிலங்களுக்கு செல்ல அமலாக்கத்துறைக்கு வழிதெரிவதில்லை.மாறாக தமிழ்நாடு,கர்நாடகா உள்ளிட்ட எதிர்கட்சி ஆளும் மாநிலங்களுக்கு மட்டும் வழி தெரிகிறது.அண்ணாமலையும் அமலாக்கத்துறையும் ஒரே டீம் போல் சேர்ந்து ஆடுவது போல் தெரிகிறது. அமலாக்கத் துறை நடுநிலை இழந்து பல வருடங்கள் ஆகிவிட்டது. பாஜகவின் கைப்பாவை போல் செயல்படுகிறது என்று தெரிவித்தார். இந்த ஆய்வின்போது மதுரை தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் அம்மாபட்டி பாண்டியன்,மாநில பொதுக்குழு உறுப்பினர் உலகநாதன்,வட்டார தலைவர் தளபதிசேகர்,மாமன்ற உறுப்பினர் ஸ்வேதா சத்யன் மற்றும் கட்சி கட்சி நிர்வாகிகள், வீட்டுவசதி வாரிய பொறியாளர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# பி.ஆர்.பிளாஸ்டிக் தொழிற்சாலை திறப்பு வெங்கடேசன் எம்.எல்.ஏ பங்கேற்பு



**அலங்காநல்லூர், மார்ச். 15-**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே தேவசேரி பிரிவு, ஆத்தூர் கிராமத்தில் பி.ஆர்.பிளாஸ்டிக் தொழிற்சாலை நிறுவனம் திறப்பு விழா நடைபெற்றது. இதில் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். கவுண்டர் மகாஜன சங்க தலைவர் விஜயன், திமுக ஒன்றிய செயலாளர்கள், தன்ராஜ், பரந்தாமன், துணைச் செயலாளர் அருண் விஜயன், பொதுக் குழு உறுப்பினர் முத்தையன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். முன்னதாக கிளைச் செயலாளர் அறிவு, பி.ஆர்.பிளாஸ்டிக் நிறுவனர் ஸ்வேதா, ராம்குமார், தனசேகர் ஆகியோர் வரவேற்றனர். இந்த தொழில் நிறுவனத்தில் உணவுப்பொருட்கள் பார்சல் செய்வதற்கான பிளாஸ்டிக் பாக்ஸ், மூடிகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் வாடிக்கையாளர்கள் கேட்கும் அளவில் தயார் செய்யப்படுகிறது.

# கொட்டாம்பட்டியில் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனம் சார்பில் கடன் ஊக்குவிப்பு முகாம்



**மேலூர், மார்ச் 15-**

மதுரை மாவட்ட தொழில் மையம் சார்பில் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அலுவலவ சார்பில் மேலூர் வட்டம், கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றிய பி.எம்.எம்.யு மகளிர் திட்ட அலுவலக கூட்ட அரங்கில் மதுரை மாவட்ட புள்ளி விவர ஆய்வாளர் சு.பாண்டியராஜா அவர்கள் வட்டார அளவிலான தொழில் முனைவோர்களுக்கு ஊக்குவிப்பு முகாம் நேற்று 14 ந்தேதி நடைபெற்றது. தமிழக அரசின் கீழ் செயல்படுத்தப்படும் கடன் உதவி திட்டங்களான வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கத் திட்டம் கலைஞர் கைவினை தொழில் திட்டம் மற்றும் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனம் மேம்பாட்டு திட்டம், திட்ட மதிப்பீடு ஒரு லட்சம் முதல் 500 லட்சம் வரை மானியமாக 25 சதவீதம் முதல் 35 சதவீதம் வரை உள்ள கடன் திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். இக்கூட்டத்தில் 120-க்கும் மேற்பட்ட ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர். மேலும் மகளிர் திட்ட அலுவலர்கள் எம்.கே. மோகனா வட்டார இயக்க மேலாளர், பயிற்சியாளர் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# நத்தம் அருகே பட்டாசு ஆலையில் பாதுகாப்பு குழுவினர் திடீர் ஆய்வு



**நத்தம், மார்ச் 15-**

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பட்டாசு ஆலைகளில் பாதுகாப்பு மற்றும் கோடை கால பாதிப்புகளை தவிர்க்கும் வகையில் ஆய்வுகள் மேற்கொள்ள திண்டுக்கல் கலெக்டர் உத்தரவிட்டிருந்தார். அதன்படி நத்தம் அருகே ஆவிச்சிபட்டியில் உள்ள பட்டாசு ஆலையில் மாவட்ட தீ மற்றும் தொழிலக பாதுகாப்பு குழு துணை இயக்குனர் அமர்நாத் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

இதில் பட்டாசு ஆலையில் அரசின் வழிகாட்டு நெறிமுறைகள் முறையாக பின்பற்றப்பட்டுள்ளதா? பாதுகாப்பான முறையில் வெடிகள் தயாரிக்கப்படுகிறதா? என்பது குறித்தும் ஆய்வு செய்தார்.இதில் உதவி இயக்குனர் மணிமாறன் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் சதீஸ்குமார்,தீயணைப்பு நிலைய அலுவலர் விவேகானந்தன் வருவாய் ஆய்வாளர் துர்காதேவி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# பிரதம மந்திரி விவசாயிகளின் கௌரவ நிதி உதவி தொகை கலெக்டர் தகவல்

**விருதுநகர், மார்ச் 15-**

விருதுநகர் மாவட்டத்தில் விவசாயிகளின் நில உடமைகளை சரிபார்த்தல் மற்றும் விவசாயிகளுக்கு அடையாள எண் உருவாக்குதல் பணிகள் நடைபெற்று வருகிறது.

வேளாண்மை உழவர் நலத்துறை பணியாளர்கள் மூலம் விவசாயிகளின் நில உடமைகளை சரிபார்த்து விவசாயிகளுக்கு அடையாள எண் உருவாக்குதல் பணிகள் நடைபெற்று வருகிறது. இல்லம் தேடி கல்வி தன்னார்வலர்கள், சமுதாய வளபயிற்றுனர்கள் ஆகியோரும் இணைந்து இப்பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.

விருதுநகர் மாவட்டத்தில் மொத்தம் 51,681 பயனாளிகள் பிரதம மந்திரியின் விவசாயிகள் கௌரவ நிதி தொகையினை பெற்று வருகின்றனர். ஆனால் 22,258 விவசாயிகள் மட்டுமே தனித்துவ அடையாள எண் பெற பதிவு செய்துள்ளனர். விருதுநகர் மாவட்ட விவசாயிகள் தங்களின் சொந்த கிராமங்களை விட்டு வேறு இடத்தில் வசித்தாலும் அருகில் உள்ள அனைத்து இ-சேவை மையங்களில் தங்களின் நில உடமைகளை இலவசமாக பதிவு செய்து பயன்பெறலாம். தங்களுடைய பட்டா, ஆதார் அட்டை மற்றும் அலைபேசி எண் கொண்டு சென்று பதிவு செய்யக் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு பதிவு செய்யப்படாத அடையாள எண் பெறும் விவசாயிகளுக்கு மட்டுமே மத்திய, மாநில அரசுகளின் மானிய திட்டங்களை ஒற்றை சாளர முறையில் பயன்படுத்த முடியும். மீதம் உள்ள 29,423 விவசாயிகள் வருகிற மார்ச்-31-ம் தேதிக்குள் தங்களின் நில உடமைகளை பதிவு செய்து அடையாள எண் பெற்று பயனடைய வேண்டும் என மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.



**பழனி மாரியம்மன் திருக்கோவில் திருவிழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு அன்னதானத்தை அ.தி.மு.க. மாநில இளைஞர் அணி துணை செயலாளர் ரவிமனோகர் துவக்கி வைத்தார். உடன் நகர செயலாளர் முருகானந்தம், மாவட்ட இளைஞரணி செயலாளர் அன்வர்தீன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை கிளைக் செயலாளர் தேரடி சரவணன் செய்திருந்தார்.**

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

# வத்தலக்குண்டு மகா சக்தி கருமாரியம்மன் கோவில் குடமுழுக்கு: பக்தர்கள் பங்கேற்பு



**வத்தலகுண்டு, மார்ச் 15-**

திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டு பரமசிவம் நகரில் அமைந்துள்ள நூறாண்டுகள் பழமையான வரலாற்று சிறப்பு வாய்ந்த மகா சக்தி கருமாரியம்மன் திருக்கோவில் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் குடமுழுக்கு விழா நடைபெற்றது.

பரமசிவம் நகரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் ஸ்ரீ மகா சக்தி கருமாரியம்மன் ஆலயத்தின் புணர அமைப்பு திருப்பணிகள் நடைபெற்ற முடிவடைந்த நிலையில் ஆகிய தெய்வங்களுக்கு, புதிதாக விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கோவில் குடமுழுக்கு விழாவை முன்னிட்டு, ஸ்ரீகணபதி ஹோமம், ஸ்ரீசுதர்சன ஹோமம், ஸ்ரீமகாலட்சுமி ஹோமம், நவகிரக ஹோமம் மற்றும் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றது.

யாக சாலை தர்மத்துப்பட்டி சிவ ஸ்ரீ கோபால் சிவாச்சாரியார் தலைமையில் நடைபெற்றது. பின்பு கலசங்களில் புனித நதிகளில் இருந்து புனித நீர் கொண்டு வரப்பட்டு தீர்த்த கலசங்கள் முளைப்பாரி அழைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

வத்தலகுண்டு மற்றும் இதனை சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த பக்தர்கள் புனித நதிகளின் புனித நீர் மற்றும் தீர்த்த குடங்களை, ஊர்வலமாக எடுத்து கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சிறப்பு அலங்காரம் தீபாரதனை பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றது விழா ஏற்பாடுகளை திருக்கோயில் நிர்வாகி தங்கப்பாண்டி பூசாரி செய்து இருந்தார் நிகழ்ச்சியில் ஏராளமான கலந்து கொண்டனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் தமிழ்நாடு அரசின் 2025-2026-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்பாக முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது முதன்மைச்செயலாளர் த.உதயசந்திரன், முதன்மை செயல் அலுவலர் பூஜா குல்கர்னி, நிதித்துறை சிறப்பு செயலாளர் பிரசாந்த், மு.வடநெரே ஆகியோர் உடனிருந்தனர்.

# மத்திய அரசால் தமிழக நிதி நிலை பாதிப்பு: நிதியமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம்

சென்னை, மார்ச் 15-

“மத்திய அரசு கல்வி நிதியை விடுவிக்காமல் நிறுத்தி வைத்ததும், பேரிடர் நிவாரணப் பணிகளுக்கு சொற்பமான நிதி விடுவித்ததும் மாநில அரசின் நிதி நிலையை வெகுவாகப் பாதித்துள்ளது” என்று தமிழக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

2025-26-ம் நிதி ஆண்டுக்கான தமிழக பொது பட்ஜெட்டை, சட்டப்பேரவையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று (மார்ச் 14) காலை தாக்கல் செய்தார்.

அப்போது தமிழக அரசின் நிதிநிலை குறித்து அவர் பேசியது: “2025-26 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 2,20,895 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, வணிகவரிகளின் கீழ் 1,63,930 கோடி ரூபாய், முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவுக் கட்டணங்களின் கீழ் 26,109 கோடி ரூபாய், வாகனங்கள் மீதான வரிகளின் கீழ் 13,441 கோடி ரூபாய் மற்றும் மாநில ஆயத்தீர்வையின் கீழ் 12944 கோடி ரூபாய் வரி வருவாய் மதிப்பீடுகளை உள்ளடக்கியதாகும்.

ஒட்டுமொத்தமாக, 2025-26 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநிலத்தின் சொந்த வருவாய் மதிப்பீடான 2,49,713 கோடி ரூபாய், மொத்த வருவாய் வரவுகளில் 75.31சதவீதத்தைக் கொண்டிருக்கும். அரசின் பெருமுயற்சிகளால் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் உயர்ந்து வரும் அதே வேளையில், மத்திய அரசிடமிருந்து வரப்பெறக்கூடிய உதவி மானியங்கள், மத்திய வரிகளில் பங்கு ஆகியவை மொத்த வருவாய் சதவீதத்தில் குறைந்துகொண்டே வந்துள்ளன. மத்திய அரசு, ஒருங்கிணைந்த கல்வி இயக்கத்தின் கீழ் நிதியை விடுவிக்காமல் நிறுத்தி வைத்ததும் ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட தமிழகத்துக்கு தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதியை விடுவிக்க மறுத்ததும், மிக்ஜாம் புயல் மற்றும் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட பெருவெள்ளம் ஆகிய இரு தொடர் பேரிடர்களின் நிவாரணப் பணிகளுக்கு தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மிகச் சொற்பமான 276 கோடி ரூபாயை மட்டுமே விடுவித்ததும் மாநில அரசின் நிதிநிலையை வெகுவாகப் பாதித்துள்ளது.

2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 49,755 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட மத்திய வரிகளில் பங்கு திருத்த மதிப்பீடுகளில் 52,491 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. திருத்த மதிப்பீடுகளில் இப்பங்கு உயர்ந்திருந்தாலும், மத்திய அரசு தொடர்ந்து அதிக அளவில் மேல் வரிகளையும், கூடுதல் கட்டணங்களையும் விதிப்பதால் மாநில அரசுக்கு கிடைக்க வேண்டிய பங்கு மிகவும் குறைவாகவே உள்ளது. நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 6 சதவீதத்தைக் கொண்டிருக்கும் நாம், தேசியப் பொருளாதார வளர்ச்சியில் 9 சதவீதப் பங்களிக்கும் அதே வேளையில், மத்திய வரிகளில் தமிழகத்துக்கான பங்கானது வெறும் 4 சதவீதம் மட்டுமே என்பது, மாநிலத்துக்கு இழைக்கப்படும் அநீதியைத் தவிர வேறெதுவும் இல்லை.

2025-26 ஆம் ஆண்டில் மொத்த வருவாய் வரவினங்கள் 3,31,569 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, திருத்த மதிப்பீடுகளைவிட 12.81 சதவீதம் அதிகமாகும். 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மொத்த வருவாய் செலவினங்கள் 3,73,204 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 2024-25 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளை விட 9.65 சதவீதம் வளர்ச்சி கொண்டதாகும்” என்று அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

# தமிழ்நாட்டின் தாயுமானவர் முதல்வர்: முதல்வருக்கு அன்பில் மகேஷ் பாராட்டு

சென்னை, மார்ச் 15-

பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ. 46,767 கோடி ஒதுக்கியுள்ளார் தமிழ்நாட்டின் தாயுமானவர் முதல்வர் என்று அத்துறையின் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், முதல்வர் ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி, நாடே போற்றும் வகையில் அனைவரின் எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்யும் வகையில் 2025-26ஆம் நிதியாண்டிற்கான #எல்லார்க்கும்-எல்லாம் நிதிநிலை அறிக்கையினை தாக்கல் செய்துள்ளார் அமைச்சர் தங்கம் தென்னரசு.

இந்தாண்டு நிதிநிலை அறிக்கையில் பள்ளிக் கல்வித்துறைக்காக ரூ.46,767 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார் தமிழ்நாட்டின் தாயுமானவர் முதல்வர்.

மேலும் மாநில உரிமைகளைக் காக்கும் வகையில் ‘எத்தகையத் தடைகள் வரினும் இந்தித் திணிப்பை ஏற்க மாட்டோம். ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு வழங்க வேண்டிய ரூ.2,152 கோடியை தமிழ்நாடு அரசே கொடுக்கும்!’ என உறுதியோடு அறிவித்த தமிழ்நாடு முதல்வருக்கும், நிதியமைச்சருக்கும் மாணவர்கள் ஆசிரியப் பெருமக்களின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கல்லூரி மாணவர்களுக்கு...(1-ம் பக்க தொடர்ச்சி)

மடிக்கணினி வழங்கப்படும். பெற்றோர் இழந்து, மிகவும் வறிய நிலையில் உள்ள 50 ஆயிரம் குழந்தைகளுக்கு மாதந்தோறும் ரூ.2,000 உதவித் தொகை வழங்கப்படும். இவர்கள் பள்ளிப் படிப்பை இடைநிற்றல் இன்றி தொடரவும், கல்லூரியில் சேரவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### புனல் மின் நிலையங்கள்

ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களில், பெண்கள் பெயரில் அசையா சொத்துகள் வாங்குவதை ஊக்குவிக்கும் வகையில், ரூ.10 லட்சம் வரை பெண்கள் பெயரில் பதிவு செய்யப்படும் அசையா சொத்துகளுக்கு பதிவு கட்டணம் 1 சதவீதம் குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வீடு, மனை, விவசாய நிலம் உள்ளிட்ட அனைத்து அசையா சொத்துகளுக்கும் இது பொருந்தும். ரூ.11,721 கோடியில் புதிய புனல் மின் நிலையங்கள் அமைக்கப்படும். இவற்றில் வெள்ளிமலை - 1,100 மெகாவாட் திறன் ஆழியாறு - 1,800 மெகாவாட் திறன் கொண்டதாக இருக்கும்.

### அரசு ஊழியர்களுக்கானது

பல்வேறு அரசுத் துறைகளில் காலியாக உள்ள 40,000 பணியிடங்கள் வரும் நிதியாண்டில் நிரப்பப்படும். 1721 முதுகலை ஆசிரியர்கள், 841 பட்டதாரி ஆசிரியர்கள் விரைவில் நியமனம் செய்யப்படுவார்கள். 150 வகையான அரசு சேவைகளை இணைய வழியில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசு ஊழியர்களுக்கு வங்கிகளில் கடன் பெற சலுகைகள் வழங்கப்படும். அரசு ஊழியர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஈட்டிய விடுப்பு நாள்களுக்கு பணப்பலன் பெறும் திட்டம் மீண்டும் கொண்டுவரப்படும். தமிழகத்தில் காலியாகவுள்ள 40,000 அரசுப் பணியிடங்கள் நிரப்பப்படும் என அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.

### புற்றுநோய் தடுப்பூசி

ஒரு நோய்க்கு தடுப்பூசி இருந்தும், அதன் கட்டணம் காரணமாக பலராலும் கருப்பைவாய் புற்றுநோய் தடுப்பூசியை செலுத்திக்கொள்ள இயலவில்லை. இதனால், பரவிவரும் கருப்பைவாய் புற்றுநோயை தடுப்பதற்கான எச்பிவி தடுப்பூசி 14 வயதுடைய அனைத்து பெண் குழந்தைகளுக்கும் படிப்படியாக செலுத்தப்படும். இதற்கான ரூ. 36 கோடி ஒதுக்கப்படுகிறது என்ற அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.

### 2 மணி நேரம் 38 நிமிடம் பட்ஜெட் வாசித்த அமைச்சர்

**தமிழக சட்டசபையில் நேற்று காலை 9.30 மணிக்கு 2025-26-ம் ஆண்டுக்கான பொது பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. சரியாக, காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மு.அப்பாவு திருக்குறள் வாசிக்க கூட்டம் தொடங்கியது. தங்கம் தென்னரசு பட்ஜெட் உரையை காலை 9.32 மணிக்கு தொடங்கி மதியம் 12.10 மணிக்கு உரையை நிறைவு செய்தார். பட்ஜெட் உரையை 2 மணி நேரம் 38 நிமிடம் வரை அவர் வாசித்தார்.**

### தொழில்துறைக்கு...

ஓசூர் மற்றும் விருதுநகரில் புதிய டைடல் தொழில்நுட்ப பூங்கா அமைக்கப்படும். இதன்மூலம் 6,600 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பெறுவார்கள். மதுரை, கடலூரில் ரூ.250 கோடியில் காலணித் தொழிற் பூங்கா, 9 இடங்களில் ரூ.3,566 கோடியில் புதிய சிட்கோ தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும். இதன் மூலம் 17,500 பேருக்கு வேலைவாய்ப்பு பெறுவார்கள். பத்து லட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ.2.5 லட்சம் கோடி வங்கிக் கடன் வழங்கப்படும் என்பவை சிறப்பான அறிவிப்புகளாக மக்களால் பார்க்கப்படுகிறது.

### புதிய அரசு கல்லூரிகள்

தமிழ்நாட்டில் மாணவர்களின் உயர்கல்விச் சேர்க்கை தேவையை நிறைவேற்றும் விதமாக, நீலகிரி மாவட்டம் குன்னூர், திண்டுக்கல் மாவட்டம் நத்தம், சென்னை மாவட்டம் ஆலந்தூர், விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி, செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர், சிவகங்கை மாவட்டம் மானாமதுரை, திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை, தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர், பெரம்பலூர் மாவட்டம் பெரம்பலூர் மற்றும் தூத்துக்குடி வட்டம் ஒட்டப்பிடாரம் ஆகிய இடங்களில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும்.

### அறிவியல் வளர்ச்சி மையம்...

மாணவர்களிடையே அறிவியல் சிந்தனையை வளர்த்திடவும், இளைஞர்களுக்கு புதிய தொழில்நுட்ப வசதிகளை அறிமுகம் செய்திடவும் சிங்கப்பூர் அறிவியல் மையத்துடன் இணைந்து நவீன முறையில் சென்னையில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் அறிவியல் மையம் உருவாக்கப்படும். இந்த மையத்தில் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதப்புலங்கள், விண்வெளி, வானவியல் துறைகளின் மெய்நிகர் மாதிரிகளும் இடம் பெற்றிருக்கும். மேலும் குழந்தைகளுக்கான அறிவியல் பூங்கா, நவீன வானவியல் தொலைநோக்கு வசதிகள், ஆழ்கடல் உயிரினங்கள் மற்றும் வானவியல் நகர்வுகளை ஆழ்ந்து உணரக்கூடிய டிஜிட்டல் திரை அனுபவ அரங்குகள், அறிவியல் மாநாட்டு கூடங்கள், பார்வையாளர்களுக்கான பசுமை புல்வெளிகள் என அனைத்து வசதிகளும் இடம் பெறும்.

### புதிய டைடல் பூங்கா...

ஒசூர் மற்றும் விருதுநகரில் புதிய டைடல் தொழில்நுட்ப பூங்கா அமைக்கப்படும். இதன்மூலம் 6,600 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பெறுவார்கள். மதுரை, கடலூரில் ரூ.250 கோடியில் காலணித் தொழிற்பூங்கா அமைக்கப்படும். இதன்மூலம் 20,000 பேர் வேலை வாய்ப்பு பெற்று பயன்பெறுவார்கள். பத்து லட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ.2.5 லட்சம் கோடி வங்கிக் கடன் வழங்கப்படும். ஊட்டி ரேஸ் கோர்ஸ் பகுதியில் ரூ.70 கோடி மதிப்பில் எழில்மிகு சுற்றுலாப் பூங்கா அமைக்கப்படும்.

### புதிய விமான நிலையம்


மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு விமான நிலையம் முக்கியம் என்பது நன்கு அறிந்த அரசு, கோவை, மதுரை, திருச்சி, தூத்துக்குடி விமான நிலைய விரிவாக்கப் பணிக்கு ரூ. 2,938 கோடி மதிப்பிலான நிலத்தை கையகப்படுத்தி மத்திய அரசுக்கு வழங்கியுள்ளது. சேலம் விமான நிலையத்துக்கான நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது.

பரந்தூர் விமான நிலையப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில், தென் மாநிலங்களுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் அதிகரித்து வரும் சூழலில், ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரம் பகுதியில் புதிய விமான நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். மேற்குறிப்பிட்ட அறிவிப்புகள் உள்பட எண்ணற்ற அறிவிப்புகள் தமிழக நிதிநிலை அறிக்கையில் வெளியாயின.



● அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நேற்று சட்டப் பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். பின்னர் அவர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த காட்சி.

# தொகுதி மறுவரையறை கூட்டம்: கேரள முதல்வருக்கு தி.மு.க. நேரில் அழைப்பு



திருவனந்தபுரம், மார்ச்15-

நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை தொடர்பாக சென்னையில் நடைபெற உள்ள கூட்டு நடவடிக்கை குழு கூட்டத்தில் பங்கேற்க கேரளா மாநில முதல்வர் பினராயி விஜயனுக்கு தி.மு.க. சார்பில் நேரில் அழைப்பு விடுக்கப்பட்டது.

திருவனந்தபுரத்தில் முதல்வர் பினராயி விஜயனை சந்தித்து அமைச்சர் பி.டி. தியாகராஜன், தி.மு.க. எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர், முதல்வர் மு.க. ஸ்டாலினின் அழைப்புக் கடிதத்தை வழங்கினர். மேலும், கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுத்தனர்.

இதனையடுத்து, இந்தச் சந்திப்பு குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள பி.டி.தியாகராஜன், இந்த தொகுதி மறுவரையறை என்பது, கூட்டாட்சி தத்துவத்துக்கும், மாநிலங்களின் பிரதிநிதித்துவ உரிமைக்கும் எதிரான மறுக்க முடியாத தாக்குதலாகும். இந்த விஷயத்தில் நமது மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் கூட்டுப் போராட்டத்திற்கான தனது முழுமையான ஆதரவை கேரள முதல்வர் உறுதி செய்தார்" என குறிப்பிட்டுள்ளார்.

தமிழச்சி தங்கபாண்டியன் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், கேரள முதல்வர் பினராயி விஜயனை, தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் சார்பில், தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் பி.பி.தியாகராஜனும், நானும் சந்தித்து, அழைப்பு விடுத்தோம். இதே போல், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநிலச் செயலாளர் மாஸ்டர் கோவிந்தனையும் சந்தித்து அழைப்பு விடுத்தோம்" என குறிப்பிட்டுள்ளார்.

# 5 லட்சம் பேருக்கு இலவச வீட்டுமனை பட்டா: அமைச்சர் தங்கம் தென்னரசு

சென்னை, மார்ச் 15-

5 லட்சம் பேருக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்படும் என அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

2025-2026-ம் ஆண்டுக்கான தமிழக பட்ஜெட் உரையின் போது நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேசியதாவது:-

சென்னை மாநகர் மற்றும் அதன் சூழ்பகுதிகளில், ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேல் வசிக்கும் தகுதியுடைய குடும்பங்களுக்கும், அதேபோன்று மாவட்டத் தலைநகரின் 16 கி.மீ. சுற்றளவிற்குள் உள்ள பகுதிகள் மற்றும் நகராட்சி மற்றும் பேரூராட்சியின் 8 கி.மீ. சுற்றளவிற்குள் உள்ள பகுதிகளில் வீட்டுமனை ஒப்படைக்க வழங்க விதிக்கப்பட்ட தடையாணை ஒருமுறை தளர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களில் 5 ஆண்டுகளுக்கு மேல் வசிக்கும் மக்களுக்கும் வீட்டுமனை தடையாணை ஒருமுறை தளர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களில் 5 ஆண்டுகளுக்கு மேல் வசிக்கும் மக்களுக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.

ஏற்றத்தாழ்வற்ற, சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் உயரிய நோக்குடன். சொந்த வீடற்ற / நிலமற்ற ஏழைக் குடும்பங்களுக்கு விலையின்றி வீட்டு மனைப் பட்டா வழங்குவதை அரசு தன் முன்னுரிமைக் கொள்கையாகக் கொண்டுள்ளது. இதுவரை 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் மாநிலம் முழுவதும் பல்வேறு பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், மேலும் 5 இலட்சம் பட்டாக்கள் இந்த ஆண்டு வழங்கப்படும் என்றார்.

மேலும் முதற்கட்டமாக. மிகவும் வறிய நிலையில் உள்ள சுமார் 50,000 குடும்பங்களில் குழந்தைகள் தங்களின் இரண்டு பெற்றோரையும் இழந்து தங்களது உறவினர்களின் பாதுகாப்பில் வளர்ந்து வருவது தெரியவந்துள்ளது. தாயுமானவரின் கரங்கள் இக்குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில் இக்குழந்தைகளின் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு வரை இடைநிற்றல் இன்றி அவர்கள் கல்வியை தொடர. மாதம் 2000 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும். பள்ளிப்படிப்பு முடித்தவுடன் கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.



● சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணாவின் நினைவிடத்தில் நேற்று தமிழ்நாடு அரசின் 2025-2026-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்பாக அவரது நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். அருகில் கட்சியின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# கருணாநிதி நினைவிடத்தில் தங்கம் தென்னரசு மரியாதை

சென்னை, மார்ச் 15-

2025 - 2026 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்ய புறப்பட்ட நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, மறைந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி நினைவிடத்திற்கு நேரில் சென்று மரியாதை செலுத்தினார்.

சட்டப்பேரவை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள நிலையில் பலத்த எதிர்பார்ப்புகளுக்கு நடுவே, 2025-26-ம் நிதி ஆண்டுக்கான தமிழக பொது பட்ஜெட்டை, சட்டப்பேரவையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று தாக்கல் செய்கிறார். இதனை முன்னிட்டு, நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, மறைந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி நினைவிடத்திற்கு நேரில் சென்று மரியாதை செலுத்தினார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில், “எல்லார்க்கும் எல்லாம் எனும் முழக்கத்தை முன்வைத்து தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையை சட்டப்பேரவையில் தாக்கல் செய்வதற்கு முன்பாக, நவீன தமிழ்நாட்டின் சிற்பி - கருணாநிதி நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினேன்.” எனக் குறிப்பிட்டுள்ளார்.